1512

1512

Peeps At Home-land Series

Geography of the North Arcot District

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1940
MADRAS

3188

C.C. NAIDU & SONS, MADRAS

PEEPS AT HOME-LAND SERIES

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1940
MADRAS

GEOGRAPHY
OF THE
North Arcot District

IV STANDARD

915.482 (1)
3259

BY
D. SOUNDARARAJAN

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE
(*Vide Gazette, dated 30th April 1940, page 74.*)

PUBLISHERS:
C. COOMARASAWMY NAIDU & SONS
27, CHINNATAMBI STREET, MADRAS
1940

Rights Reserved]

[Price 6 Annas.

Printed at
'The Caxton Press,'
Madras.

முகவுரை

இது துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள பாடதிட்டத்தின்படி அமைந்துள்ளது. 'பூமி மனிதனுடைய இருப்பிடம்' என்னும் உண்மையை விளக்கும் நூலே பூகோள சாஸ்திரமாம். ஆதலின் முற்பகுதியில், சுவதேசியினுடைய வாழ்க்கை, (Life in the home region) தான் வசிக்கும் இடத்துக்கும் அவ்வப்போது ஏற்படும் கால வேறுபாடுகளுக்கும் இயைந்துள்ளது என்பது அறிவுறுத்தப் பட்டுள்ளது. பிற்பகுதியில் ஜில்லாவை இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், விளைபொருள்கள், போக்குவரவு சாதனங்கள், நகரங்கள் என வகுக்காமல், அவ்வப்ரதேசத்தின் தன்மைகளுக்கேற்பச் சில இயற்கைப் பிரிவுகளாக (Natural Regions) வகுத்து, ஒவ்வொன்றும் ஒரு காட்சியாக அகக்கண்ணுக்குப் புலப்படுமாறு விஷயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மனோபாவத்தைத் தழுவி 'வர்ணனை முறை' (Descriptive method) அனுஸரிக்கப்பட்டிருப்பினும், இடமின்மையால் விஷயங்களை ஆங்காங்குத் தொகுத்துக் கூறவேண்டியதாயிற்று. உபாத்திமார் வேண்டுமிடத்து வாய் மொழியால் விஷயங்களை வர்ணித்தல் மெத்த அவசியம். சித்திரப் படங்கள், புகைப்படங்கள், முதலியவைகளைக் கொண்டும் விஷயங்களை விளக்குதல் மிகவும் போற்றப்பெறுவதாகும். பிரதி அத்தியாயத்தின் இறுதியிலுமுள்ள பயிற்சிகளைச் செய்வதனுல்தான் உண்மையில் பூகோள அறிவுபெறப்படும் என்று கூறுவதும் மிகையாகாது.

சுவதேச சர்வேபடம் படித்தலே நிலப்படம் படிக்கக் கற்பதன் பிரதம அங்கமாகும். ஆதலின் அதுவும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 37-ம் பக்கத்தில் காட்டியது போன்ற சுவதேச சர்வே படங்களைப் பாடசாலைகளுக்கும் உபாத்திமார்களுக்கும் மட்டும் பாதிவிலைக்குத் தந்தருள கல்கத்தா அஸிஸ்டெண்ட் ஸர்வேயர் ஜெனரல் அவர்கள் சென்னை பூகோள ஆராய்ச்சியாளர் சங்கத் (Cathedral P. O., Gopalapuram, Madras) தாரின் வேண்டுகோளுக் கிரங்கி இசைந்துள்ளார். உபாத்திமார் தம் சுவதேசபடத்தின் குறி எண்ணை (Code number) அச்சங்கத்தாரிடமிருந்து அறிந்து, படத்தை வரவழைத்து, அதில் பெயர்களைத் தமிழில் குறித்துக்கொண்டு உபயோகிப்பின் இத்துறையில் நற்பயனுண்டாகும். ஓரங்குல அளவு விகிதப் படத்தின் விலை எட்டணுவுக்கு அதிகப்படாதாகையால், இம்முறை அனுஸரித்தல் யாவர்க்கும் எளிதேயாம்.

சரித்திர பாடதிட்டத்தில் கண்டுள்ள சுவதேச சரித்திரமும் இது கொண்டுள்ளதால் மிகப் பயனுடைத்தாகும்.

D. S.

பொருளடக்கம்

எண்	I. சுவதேச சஞ்சாரம்	பக்கம்
1.	திசைகள்	5
2.	கால நிலை	7
3.	பருவங்கள்	10
4.	காற்று	11
5.	மழை	13
6.	மழைக்கால உலா	15
7.	சீதோஷ்ணமும் வாழ்க்கையும்	18
8.	சமுத்திரப் பிரயாணம்	20
9.	கிராம சஞ்சாரம்	23
10.	நகர சஞ்சாரம்	26
11.	கைத்தொழில் பார்வை	29
12.	தொழிற்சாலை உலா	31
13.	போக்கு வரவு	33
14.	தரைப்படம்	34
15.	ஊர்ப்படம்	36
16.	தாலுக்கா வர்ணனை	39
	II. வட ஆர்க்காடு ஜில்லா	
1.	நம் ஜில்லாவின் பெயர்	41
2.	இயற்கை யமைப்பு	43
3.	சீதோஷ்ண ஸ்திதி, மழை	44
4.	சமவெளிப் பிரதேசம்	45
5.	மேட்டுப் பிரதேசம்	65
6.	மலைப் பிரதேசம்	71
7.	நம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம்	73
8.	நம் ஜில்லாவை ஒருங்கே பார்த்தல்	75
9.	நம் ஜில்லா சரித்திரம்	77
10.	நூதன பரீட்சைக் கேள்விகள்	82

சுவதேச சஞ்சாரம்

1. திசைகள்

நான்கு திசைகள்

நீங்கள் புதிதாக ஓர் ஊருக்குப் போனால், திசைகளை அறியக் கஷ்டப்படுகிறீர்கள். ஆனால் திசைகளைக் கண்டு பிடிக்க ஒரு வழி உண்டு.



திசைகளை அறிதல்

காலையில் சூரியன் உதயமாவதை நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா ? அவன் பொழுது ஏறஏற ஆகாயத்தில் உயரப் போய், நடுப்பகலில் உச்சியை அடைகிறான். பிறகு கொஞ் சம் கொஞ்சமாக எதிர்பக்கம் தாழ்ந்து, மாலையில் மறைகிறான்.

சூரியன் உதயமாகும் பக்கம்தான் **கிழக்கு**. மறையும் பக்கம் **மேற்கு**. காலையில் சூரியனைப் பார்த்து நின்றால், நமது வலதுகைப் பக்கம் **தெற்கு**. இடதுகைப் பக்கம் **வடக்கு**.

கிழக்குக்கு எதிராக எத்திசை இருக்கிறது? வடக்குக்கு எதிராக எத்திசை இருக்கிறது?



எண்திசை வட்டம்

எட்டுத் திசைகள்

மேலே சொன்ன நான்கு திசைகளுடன் அவற்றின் மத்திய திசைகளும் இருக்கின்றன. நீ சூரியனுக்கு எதிரில் ஒரு சதுரத்தில் நின்றால், நான்கு பக்கங்களும் நான்கு திசைகளில் இருப்பதைப் பார்ப்பாய். நான்கு மூலைகளும் நான்கு மத்திய திசைகளில் இருக்கின்றன. தெற்குக்கும் கிழக்குக்கும் இடையில் உள்ள மத்திய திசைக்குத் **தென்கிழக்கு** என்று பெயர். தெற்குக்கும் மேற்குக்கும் மத்தியில் உள்ளது **தென்மேற்கு**. வடக்குக்கும் மேற்குக்

கும் மத்தியில் வடமேற்கு. வடக்குக்கும் கிழக்குக்கும் மத்தியில் வடகிழக்கு.

எனவே சூரியன் உதயமாகும் பக்கம் நோக்கி, ஒரு கூட்டல் குறியை வரைந்தால், நான்கு முனைகளும் நான்கு முக்கிய திசைகளாகிய கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கைக் காட்டுகின்றன; ஒரு பெருக்கல் குறி வரைந்தால், அதன் நான்கு முனைகளும் மத்திய திசைகளைக் காட்டுகின்றன. அவை இரண்டையும் ஒன்றின்மேல் ஒன்று பொருத்தினால், எட்டுத் திசைகள் ஆகின்றன.

கேள்விகள்

சூரியன் உதயமாகும் பக்கம் பார்த்து நில். அரை வலப்பக்கம் திரும்பு. இப்பொழுது என்ன திசை? சூரியன் மறையும் பக்கம் பார்த்து நில்; முழு வலப்பக்கம் திரும்பு; இப்பொழுது என்ன திசை? அரை இடப்பக்கம் திரும்பு; இப்பொழுது என்ன திசை? தெற்கே திரும்பி நில்; உன் இரண்டு கைகளையும் பக்கங்களில் புஜ மட்டத்தில் உயர்த்து; வலது கை எத்திசையைக் காட்டுகிறது? இடது கை எத்திசையைக் காட்டுகிறது? இரண்டு கைகளையும் அப்படியே பாதிதூரம் உட்புறமாக நகர்த்து; இப்பொழுது கைகள் எத்திசைகளைக் காட்டுகின்றன?

2. கால நிலை

காலநிலையில் ஒரு நாளைப்போல் ஒரு நாள் இருப்பது இல்லை. சில நாட்களில் வெயில் நன்றாகக் காய்கிறது. சில நாட்களில் வானம் மப்பு மந்தாரமாய் இருக்கிறது. சில நாட்களில் அதனுடன் மழையும் பெய்கிறது.

நல்ல வெயில் காயும் நாட்களில் ஆகாயம் நீல நிறமாக இருக்கிறது. சில சமயங்களில் பஞ்சு குவியல் போன்ற மேகங்கள் காணப்படுகின்றன. அவை அடிப்பாகத்தில் அகன்றும் மேல் பாகத்தில் சுருள் சுருளாகக் குவிந்தும் இருக்கின்றன. நகர்ந்து போகும்போது சூரியனுக்கு நேராக வந்தால், அவற்றின் ஓரங்கள் வெள்ளியைப்போல் பிரகாசிக்கின்றன.



வெண்மேகம் கருமேகம்

இந்த வெண்மையான சுருள் மேகங்கள் அதிகமாகி ஆகாய முழுவதையும் மூடிக்கொண்டால், வெயில் இருப்பது இல்லை. அப்பொழுது மழை பெய்யலாம். சில சமயங்களில் சில மேகங்கள் கருமையாகவும் இருப்பதைப் பார்த்து இருப்பீர்கள். அவை கொஞ்ச நேரத்துக்கு எல்லாம் ஆகாயத்தை மூடிக்கொண்டு மழை பெய்யும்.

பயிற்சி

ஒரு காலண்டரை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தந்தத் தேதிக் கட்டத்தில் அடுத்த பக்கத்தில் கண்டபடிக் குறித்து வாருங்கள்.

*தினந்தோறும் ஆகாயம் எவ்விதம் இருந்தது என்றும் காட்டு.



தேதிவாரிக் காலநிலை

1. வெயில் காய்ந்த நாளுக்குக் குறி.
2. மழை பெய்த நாளுக்குக் குறி.
3. மந்தாரமான நாளுக்குக் குறி.
4. காற்று அடிக்கும் திசைகுறி.

மாதக் கடைசியில் கீழ்க்கண்ட குறிப்புகள் தருக.

1. வெயில் காய்ந்த நாட்களின் மொத்தம்.
2. மழை பெய்த நாட்களின் மொத்தம்.
3. மந்தாரமான நாட்களின் மொத்தம்.

மாதத்தின் எந்த பாகத்தில் தொடர்ச்சியாக வெயில் காய்ந்தது?
,, ,, மந்தாரமாய் இருந்தது?
,, ,, மழை பெய்தது?

முதலிலா? மத்தியிலா? கடைசியிலா? இதேமாதிரி ஒரு வருஷத்துக்குத் தருக.

---

* வெண்மேகம் - பென்சிலை லேசாகத் தேய்க்க; கருமேகம் - கரும்பென்சில்; நீல ஆகாயம் - ஒன்றும் தேவை இல்லை. காற்று அடிக்கும் திசையை அம்பால் காட்டுக. படத்தின் அடியில் இளங் காற்றுக்கு ஒரு அம்பு ↑; சாதாரண காற்றுக்கு ↑ வால்அம்பு ஒன்று; இன்னும் அதிகக் காற்று—↑↑ இரண்டு வால் அம்புகள். காற்றின் திசையைக் காட்டும்போது படத்தின் தலைப்பக்கத்தை வடக்காகக் கொள்.

3. பருவங்கள்

கோடைக்காலத்தில் நமக்கு விடுமுறை நாட்கள் அல்லவா? அப்பொழுது ஏன் பாடசாலைகளை மூடிவிடுகிறார்கள்?

கோடைக் காலத்தில் சூரிய வெப்பம் அதிகம். காலை பத்து மணி முதல் மாலை மூன்று மணி வரையில் பொறுக்க முடியாத வெயில். புழுக்கமும் அதிகம். நாம் சீக்கிரத்தில் இளைப்பு அடைகிறோம். அக்காலத்தில் இராத்திரியில் காற்று கொஞ்சமும் இல்லை. காலை நேரங்களில் பெருங் காற்று தென்மேற்கில் இருந்து அடிக்கிறது. இப்பருவத்தின் கடைசியில் தூறல் உண்டு. இவ்விதம் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் இருக்கிறது.

ஆகஸ்ட் முதல் மழைக்காலம். ஆறு, ஏரி, குளம், குட்டைகளில் தண்ணீர் வருகிறது. உஷ்ணம் தணிகிறது. சீதோஷ்ணம் சுகமாக இருக்கிறது. நவம்பர் மாதத்துடன் மழைக்காலம் முடிகிறது. இக்காலத்தில் முந்திய பாகத்தில் தென்மேற்கில் இருந்தும் பிந்திய பாகத்தில் வடகிழக்கில் இருந்தும் காற்று அடிக்கிறது.

டிசம்பர் மாதம் குளிர் ஆரம்பிக்கிறது. நாட்கள் செல்லச் செல்ல அதிகக் குளிர். பகலிலும் உஷ்ணம் அதிகமாக இல்லை. சீதோஷ்ணம் மிகவும் சுகம். காலை நேரங்களில் பனி பெய்கிறது. மழை அபூர்வம். இக்காலத்தில் காற்று வடகிழக்கில் இருந்து அடிக்கிறது. இவ்விதம் மார்ச் மாதம் வரையில் இருக்கிறது.

பயிற்சி

இப்பருவங்கள் இடத்துக்கு இடம் சற்று வித்தியாசப்படும். உங்கள் ஊரில் எந்தெந்த மாதங்களில் வெயில், மழை, குளிர் அதிகம்?

4. காற்று

காற்றை நாம் கண்ணால் பார்க்கமுடியாது. ஆனால் இலை, கொடி, துணி, ஜன்னல், கதவு முதலியன அசையும்போது காற்று இருக்கிறது என்று அறிகிறோம்.

காற்று கொஞ்சமாய் இருந்தாலும் சரி; அதிகமாக இருந்தாலும் சரி; தான் இருக்கும் மொத்த இடத்திலும் பரவும். ஒரு அறையில் புகை போட்டால், கொஞ்சமாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும், அறை முழுவதும் பரவுகிறது. கொஞ்சமான புகை லேசாகவும், அதிகமான புகை நெருக்கமாகவும், பரவும். இதே மாதிரிதான் பூமி மீதும் காற்று எங்கும் பரவி இருக்கிறது. இதற்கு அசையாத பொழுது **நிலைக்காற்று** எனலாம்.

ஆனால் காற்று நிலையாக இருப்பது இல்லை. மெதுவாக அசைந்து வீசுவதற்கு **இளங்காற்று** என்றும், சாதாரண வேகத்துடன் அடிப்பதற்குக் **காற்று** என்றும்,

அதிக வேகத்துடன் அடிப்பதற்குப் **பெருங்காற்று** என்றும் பெயர்.

காற்று எப்பொழுதும் ஒரே திசையில் இருந்து வீசாது. சில மாதங்களில் ஒரு திசையிலிருந்தும், இன்னும் சில மாதங்களில் வேறு திசையிலிருந்தும் வீசும். காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது என்று எப்படிக் கண்டுபிடிப்



திசை அறி கருவி

பது? ஒரு மெல்லிய துணியை வெட்டவெளியில் சிறிது அளவு தொங்கவிட்டுப் பிடித்தால், சுமாரான காற்று அடித்தால், அத்திசையில் துணியும் வீசும். கொஞ்ச மண்ணை எடுத்துத் தூவினுல் அது எந்தப் பக்கம் போகிறதோ, அப்பக்கமாகக் காற்று அடிக்கிறது என்று அறியலாம். எங்காவது புகை போவதைக் கவனித்தாலும் காற்று அடிக்கும் திசையை அறியலாம். ஆனுல் இவற்றினுல் இளங்காற்றை

அறிய முடியாது. இதற்காகத் திசையறி கருவியை உபயோகிக்கலாம். அது எதிர்பக்கத்தில் கண்டபடி இருக்கும். அதன் துடுப்பு திரும்பும் பக்கம் காற்று அடிக்கிறது என்று சுலபமாக அறியலாம்.

பயிற்சி

1. நீங்கள் பிரதிதினமும் காலநிலையைக் குறிக்கும்போது காற்றடிக்கும் திசையை இந்தக் கருவியைக்கொண்டு கண்டுபிடியுங்கள்.

2. இந்தக் கருவியை நீங்களே செய்யலாம். $\frac{3}{8}''$ கனமும் $17\frac{1}{2}''$ நீளமுமுள்ள ஒரு உருளைத் துடுப்பு; அதன் ஒரு நுனியில் 6″ நீளமான 8 இதழ்களை உடைய காற்ருடி; மற்ெருரு முனையில் $3\frac{1}{2}''$ துடுப்பில் தைத்தும் $5\frac{1}{2}''$ வெளியில் இருப்பதுமான விசிறி; வளையின் மத்திய குறுக்களவு $2\frac{1}{2}''$; இந்த உருளைத்துடுப்பை விசிறியில் இருந்து 9″ தள்ளித் திருகாணியால் ஓர் உயர்ந்த கம்பத்தில் பொருத்து; காற்ருடியும், துடுப்பும் தாராளமாகத் திரும்ப, அவற்றின் இரு பக்கங்களிலும் ரப்பர் மோதிரங்களை இருசுகளுக்குப் போடுக.

5. மழை

மழை எங்கிருந்து வருகிறது? ஆகாயத்தில் இருந்து வருகிறது அல்லவா? பூமியில் இருந்து தண்ணீர் ஆகாயத்துக்குச் சென்று அங்கிருந்து மழையாகப் பெய்கிறது.

கொஞ்ச ஜலத்தை ஒரு தட்டில் வார்த்து வைத்தால், சிறிது சிறிதாக குறைகிறது. ஏனெனில் அது ஆவியாகிக் காற்றுடன் கலந்துவிடுகிறது. அதேமாதிரிதான் குளம், குட்டைகளிலுள்ள நீரும் சூரிய வெப்பத்தினுல் ஆவியாக மாறிக் காற்றில் கலக்கிறது. அது காற்றைவிட லேசானது. ஆகையால் காற்றில் மிதந்து மேலே செல்கிறது; குளிர்ச்சியினுல் புகைபோல் நிறம் கொண்டு நமக்குத் தெரிகிறது. இதைத்தான் நாம் **மேகம்** என்கிருேம்.

இந்த மேகங்கள் குளம் குட்டையில் இருந்து ஆவி யான சொற்பத் தண்ணீரால் மட்டும் ஆனவையல்ல. பூமியைச் சுற்றி மைல் கணக்காக விசாலமான சமுத்திரங் கள். அவற்றின் தண்ணீர் சூரிய வெப்பத்தினுல் ஆவி யாகி மேலே கிளம்பி, மேகங்கள் ஆகிறது. காற்று அவற்றை அடித்துக்கொண்டு நிலத்தின்மேல் கொண்டு வருகிறது.



மேகமும், மழையும்

உயரமான மலைகள் உள்ள இடங்களுக்கு மேகங்கள் வரும். அவற்றைத் தாண்டிச் செல்ல இன்னும் உயரப் போகும். உயரப் போகப் போகக் குளிர்ச்சி அதிகம். அதனுல்தான் கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்காகப் பணக் காரர் உயரமான மலையாகிய நீலகிரிக்குப் போகிறுர்கள். உயர அடைந்ததும் மேகங்கள் சில்லிட்டுத் தண்ணீராக மாறுகின்றன. தண்ணீர் காற்றைவிட லேசானது. அதனுல் கீழே விழுகிறது. விழும்போது கணக்கற்ற துளிகள் ஆகிறது. அதைத்தான் நாம் மழை என்கிறோம்.

அதே விதமாகக் காடுகளின் மேலும் காற்று குளிர்ச்சி யானது. ஆகையால் அவற்றின்மேல் செல்லும் மேகங் களும் குளிர்ச்சி யடைந்து மழையாகும்.

இவ்விதம் மேகங்கள் குளிர்ச்சியாகும்போது பல மைல் படர்ந்துள்ள மேகங்கள் தொத்துக் குளிர்ச்சி யடைகின்றன. மலைகளின் மேலாவது காடுகளின் மேலாவது மட்டும் மழை பெய்யாமல், சுற்றுப் புறம் பல மைல்கள் வட்டத்துக்கு மழை பெய்யும்.

பயிற்சி

ஒரு பானையில் தண்ணீர் வார்த்து நன்றாகக் காய்ச்சு ; தண்ணீர் கொதிக்கும்போது தண்ணீரில் இருந்து என்ன மேலே போகிறது ? பானையின் வாயிக்குச் சமீபத்தில் ஒரு குளிர்ந்த சட்டியைப் பிடி ; குளிர்ந்த சட்டியின் அடிப் பாகத்தில் என்ன பார்க்கிறாய்? இதி லிருந்து உனக்கு என்ன தெரிகிறது? இதற்கும் மழை பெய்வதற் கும் உள்ள ஒற்றுமையை விளக்கு.

6. மழைக்கால உலா

நல்ல மழை பெய்த உடன் தெருவில் பார். என்ன பார்க்கிறாய்? மழைத் தண்ணீர் மண்ணை அரித்துச் சிறு சிறு கால்வாய்களை உண்டாக்குகின்றது. அவற்றில் பாய்ந்து கடைசியில் ஒரு குட்டை, ஏரி, அல்லது மடுவில் விழு கின்றது.

அது மிகவும் கலங்கலானது. ஏன்? அது அரித்து வந்தமண் கலந்து இருக்கிறது. அதனால் அந்த மண்ணின் நிறத்துக்கு ஏற்பத் தண்ணீரின் நிறம். தவிர தண்ணீர்

ஓடை

அடித்து வந்த செத்தை, இலை, காய், குச்சு முதலியனவும் மிதக்கிக்கொண்டு ஓடுகின்றன.

சமானமான விடங்களில் பாயும்போது தண்ணீரின் வேகம் சற்று நிதானம். அவ்விடங்களில் மத்தியில் ஆங்காங்கு மண் திட்டுக்கள்; தண்ணீரும் பல வளைவுகளுடனும் திரிகளுடனும் பாய்கிறது. சரிவான இடங்களில் வேகம் சற்று அதிகம். அவ்விடங்களில் மத்தியில் மண் திட்டுகள் இல்லை. ஓரங்களிலுள்ள மண்ணையும் வெகு பரபரப்புடன் அரித்துக் கொண்டு போகிறது.

மழைத் தண்ணீர் பூமிமீது செய்யும் மாறுதல்களை இன்னும் தாம் அதிகமாக அறிவோம். அதற்காக நம் ஊருக்குச் சமீபத்திலுள்ள ஓடை அல்லது காறுற்றின் ஓரம் எதிர் நோக்கிச் செல்வோம். ஓடையின் படுகை நிறைய மணல் பார்க்கிறோம். ஓரத்தில் சிறு மணல், மத்தியில் பெரு மணல். இதற்குக் காரணம் என்ன? தண்ணீர் வேகமாகப் பாயும்போது, சிறு மணல் ஓரத்தில் அலைக்கப்படுகிறது.

நாம் எதிர் நோக்கிப் போகப் போக இன்னும் பெரு மணல்; அதற்குமேல் கூழாங்கற்கள். இன்னும் சற்று மேலே சென்றால் உடைபட்ட சிறு சிறு துண்டுக்கற்கள். அவற்றிற்குமேல் பெரும் பாறைகள். இதிலிருந்து நாம் அறிவது என்ன?

பயிற்சி

உங்கள் ஊருக்கு அருகில் உள்ள ஓடையை மழைக்காலத்தில் கவனி. மண், மணல், கூழாங்கல், ஜல்லிக்கற்கள் எப்படி உண்டாயின?

7. சீதோஷ்ணமும் வாழ்க்கையும்

மரம், செடி, கொடிகள் சீதோஷ்ணத்துக்கு ஏற்ப வாழ்க்கையில் ஒத்துப்போகின்றன.

கோடைக் காலத்தில் விசேஷமான வெயில் அல்லவா? அப்பொழுது மரங்களில் இலைகள் இருந்தால், சூரிய வெப்பத்தினுல், மரத்திலுள்ள தண்ணீர் எல்லாம் ஆவியாக மாறிவிடும். மரம், தண்ணீரின்றி மரவுணவு சாரத்தை உறிஞ்ச வழி யில்லாமல், பட்டுப்போகும். இதைத் தடுக்க, மரம் ஓர் உபாயம் அனுஸரிக்கிறது. அது கோடைக்கால ஆரம்பத்தில் தன் இலைகளுக்கு மரவுணவை அனுப்பாமல் நிறுத்தி விடுகிறது. அதனுல் இலைகள் பழுப்பேறி உதிர்கின்றன. உதிர்ந்தவடுக்களில் கார்க்போன்ற பட்டையை உடனே மரம் உற்பத்தி செய்து அடைக்கிறது. அதனுல் மரத்திலுள்ள தண்ணீர் சேதமாவது இல்லை; இலைகள் உட்கொண்டு வந்த உணவும் மிச்சமாகிறது.

மழை பெய்ய ஆரம்பிக்கும் சமயத்தில் தளிர்விட ஆரம்பிக்கிறது. நல்ல மழைக் காலத்தில் இலைகள் மரங்களில் அடர்ந்து இருக்கின்றன. புல்லும் எங்கும் முளைக்க ஆரம்பிக்கிறது. பயிர்களும் நன்ருக வளர்கின்றன. எங்கும் பச்சைப் பசேல் என்று இருக்கிறது.

குளிர்ச்சி தாங்கமாட்டாத பயிர்வகைகள் மழைக் காலத்தில் நன்ருக வளர்ந்து பூத்துக் காய்த்துக் குளிர்கால ஆரம்பத்தில் அறுவடைக்குத் தயாராகின்றன. மற்றப் பயிர் வகைகள் குளிர் காலத்துப் பனியில் செழித்து வளர்ந்து, குளிர் கால முடிவில், வெயில் கால ஆரம்பத்துக்குமுன், கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராகின்றன. பழங்கள் பழுக்க அதிக உஷ்ணம் வேண்டும். ஆகையால், குளிர்கால முடிவில், மரங்களும் செடிகளும் பூக்க ஆரம்பிக்கின்றன. வெயிற்

கோடைக் காலம்

மழைக் காலம்

கால மத்தியில் காய்கள் முற்றிச் சூரிய வெப்பத்தினுல் பழுக்கின்றன. இவ்விதம் மரம், செடி, கொடிகள் சீதோஷ்ணத்துக்கு ஏற்பத் தம் வாழ்க்கையை மாற்றிக்கொள்கின்றன.

நாமும் சீதோஷ்ணத்துக்கு ஏற்ப நம் வாழ்க்கையில் சிறு மாறுதல்களைக் கொள்கிருேம் : அவை யாவை ?

பயிற்சி

1. உங்கள் பிரதேசத்தில் கீழ்க் கண்டவைகளுக்கு உதாரணம் தருக.

(1) குளிர்கால முடிவில்
(2) வெயிற்கால ஆரம்பத்தில் } அறுவடையாகுபவை.

2. நம் வாழ்க்கையில் கீழ்க்கண்டவற்றில் பருவத்துக்கு ஏற்ப உண்டாகும் மாறுதல்கள் கூறுக.

(1) வஸ்திரம் (2) உணவு (3) தங்கும் இடம் (4) வேலை செய்யும் பொழுது.

8. சமுத்திரப் பிரயாணம்

சமுத்திரக் கரையில் வசிப்பவர்களும் அங்குச் சென்றவர்களும் சமுத்திரத்தைப் பார்த்து இருப்பீர்கள். அது விசாலமான நீர்ப்பரப்பு. பூமிமீது மைல் கணக்காக மண்ணல்லவா பார்க்கிருேம் ? ஆனுல் சமுத்திரம் மைல் கணக்காகத் தண்ணீரைக் கொண்டதாகும்.

சமுத்திரம் பார்ப்பதற்கு நீல நிறம். அதன் தண்ணீர் மிக உப்பானது. அதில் எப்பொழுதும் அலைகள் உண்டு. கரைக்குத் தூரத்தில் அலைகள் சிறியவை. கரைக்கு வருபவை சற்றுத் தூரத்தில் பெரியவையாகும். அவை உயர எழும்பிப் பாய்போல் சுருண்டு பெரு இரைச்சலுடன் விழும் ; அவை ஓர் ஆள் உயரத்துக்கு மேலும் அவ்விதம் எழும்பும். அப்போது அவை பார்க்க அழகானவை.

தண்ணீரின் ஓரங்கள் வெள்ளியைப் போன்று வெள்ளை வெளேல் என்று தெரியும். சுருண்டு விழும்போது மத்தியில் ஒரு கமான் வளைத்த இடம் போன்ற இடைவெளி ஏற்படும். அலை விழுந்த தண்ணீர் கரை ஓரத்தில் சற்றுத் தூரம் மேலுக்கு வந்து, திரும்பிவிடும்.



கப்பல்

சமுத்திரத்தில் பிரயாணம் செய்ய, தற்காலத்தில் நீராவியின் உதவியால் ஓடும் பெருங் கப்பல்களை உபயோகிக்கிறார்கள். அவை இரும்புத் தகடுகளால் ஆனவை. நிலக்கரி உதவியினுலாவது மண்ணெண்ணெய் உதவியினுலாவது ஓடுகின்றன. பெருங் காற்றினுலும் தண்ணீராலும் அவற்றிற்கு ஓர் அபாயமும் இல்லை. காற்று எந்தத் திக்காக அடித்தாலும் பொருட்படுத்தாமல் தாம் போகவேண்டிய வழியே போகும்.

இந்தப் பெரிய கப்பல்களில் எல்லாவிதச் சௌகரியங்களும் இருக்கின்றன. உலாவுவதற்கு வெளித் தட்டுகள் உண்டு. அதிக கட்டணங் கட்டுவோர் வசிக்க நல்ல

அறைகள் உண்டு. குடி தண்ணீர், சமையலறை, (உணவுப் பொருள் கெடாமல் இருக்கப்) பனிக்கட்டி அறைகள், நீந்தல் தொட்டி, பந்தாடும் இடம், நடனசாலை, புத்தகசாலை, ரேடியோ, சினிமா முதலிய எல்லாச் சௌகரியங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு கப்பலிலும் சாதாரணமாய் ஓர் ஊரிலுள்ள ஜனங்கள் 1000 பேர் பிரயாணம் செய்யலாம். எந்த வித அசௌகரியமுமின்றி எல்லாச் சுகங்களையும் ஊரில் அனுபவிப்பது போலவே இங்கும் அனுபவிக்கலாம்.

சமுத்திரக் கரையில் கப்பல் தங்கும் இடத்திற்கு ஹார்பர் என்று பெயர். ஹார்பரில் கடற்கரையிலிருந்து சமுத்திரத்தில் கொஞ்சதூரம் வரையிலும் ஒரு பாலம் அமைத்து இருப்பார்கள். அதன் ஓரத்தில் கப்பல் வந்து தங்கும். அதுவரையிலும் கரையிலிருந்து புகை வண்டிகள் வந்து நிற்கும். ஒரு புகைவண்டியிலிருந்து மற்றொரு புகைவண்டிக்கு ஏறுவது போலவே புகைவண்டிகளிலிருந்து கப்பலில் சுலபமாக ஏறிக்கொள்ளலாம். பிறகு குறித்த புகைவண்டி, கால அட்டவணையில் குறித்த நேரத்தில் புறப்படுவது போலவே, கப்பலும் குறித்த நேரத்தில் பிரயாணம் ஆகும். கால அட்டவணையில் கண்டபடி எந்த எந்தத் துறைமுகத்துக்குச் செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் செல்லும்.

பயிற்சி

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களைக் கேட்டுக் கப்பல் பிரயாணத்தைப்பற்றி அறிக. பல கப்பல்கள், ஹார்பர்கள், அயல் நாடுகளின் படங்களைச் சேகரித்துக் கவனிக்க. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள துறைமுகம் எது? அங்கு எந்தெந்த நாட்களில் இருந்து கப்பல்கள் வருகின்றன? எங்கெங்குச் செல்கின்றன? அவற்றின் பெயர்களைத் தினசரிப் பத்திரிகையிலிருந்து அறிக.



உழவு

9. கிராம சஞ்சாரம்

நாம் சில மாதங்கள் கிராமத்தில் வசிப்போம். கிராமத்தாரின் வாழ்க்கையைக் கவனிப்போம். விசேஷமாகக் கிராமங்களில் வசிப்பவர்கள் பயிர்த் தொழில் செய்பவர்கள். அவர்கள் பயிரிடும் நிலங்கள் எங்கு விசேஷமோ அங்குக் கிராமங்களை அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் பயிர் செய்யும் நிலங்களுக்குத் தூரத்தில் இருந்தால் அடிக்கடி போகவும் வரவும் கஷ்டம்; தாங்கள் கஷ்டப்பட்டுப் பயிரிட்ட தானியங்களை அறுவடைக் காலத்தில் பிறர் திருடிக் கொண்டும் போய்விடக்கூடும்.

கிராமத்தாரின் வாழ்க்கை கால வேறுபாட்டுக்குத் தக்கபடி வேறுபடுகிறது. கோடைக் காலத்தில் அவர்கள் இறை கிணறுகளைச் சுற்றி மட்டும் தண்ணீர் இறைத்துக் கொஞ்சம் பயிர் ஏற்றுகிறார்கள்.

மழை பெய்தவுடன் வயல்களை உழ ஆரம்பிக்கிறார்கள். வண்டிகளில் எரு கொண்டுவந்து அவற்றிற்கு இடுகிறார்

கள். பிறகு, பயிராகத் தண்ணீர் அதிகம் வேண்டும் நெல், வெற்றிலை, கரும்பு முதலிய பயிர்களை நன்செயிலும், விசேஷமாக அப்போதைக்கப்போது பெய்யும் மழையிலேயே பயிராகக் கூடிய கம்பு, சோளம், கேழ்வரகு, கடலைக்காய்,

அறுவடை



நெற்களம்

எள், பருத்தி முதலியவைகளைப் புன்செயிலும் பயிர் செய்கிறார்கள். சில காய்கறித் தோட்டங்களையும், மா, தென்னை முதலிய தோப்புக்களையும் அமைத்துத் தண்ணீரைக் கிணற்றிலிருந்து இறைத்துப் பயிர் செய்கிறார்கள்.

வயல்களில் பயிர் ஏற ஆரம்பித்ததும் எங்கும் பச்சைப் பசேல் என்று இருக்கிறது. அக்காலத்தில் தாமும் கூலியாட்களுமாகப் பயிர்களுக்கு இடையில் முளைத்து வரும் களையைக் கொத்தி எடுத்து விடுகிறார்கள்.

நவம்பர் மாதம் முதல் அறுவடை. முதலில் புன்செய்ப் பயிர்கள்; பிறகு நன்செய்ப் பயிர்கள். ஜனவரி முடிவுடன்

அறுவடை முடிகிறது. அக்காலங்களில் கிராம ஜனங்கள் எல்லாரும் கூலியாட்களுடன் அறுவடை செய்வதிலும், அவற்றைக் களங்களுக்குக் கொண்டுபோய்த் தானியங்களைச் சேர்க்குவதிலும், பிறகு வீடுகளில் கொண்டுவந்து சேகரம் செய்வதிலும் அதிக மும்முரமாக வேலை செய்கிறார்கள். இக் காலத்தில் அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். காரணம் என்ன ?

பிப்ரவரி முதல் மறுபடியும் கோடைமழை பெய்யும் வரையில் குடியானவர்களுக்கு அவ்வளவாக வேலை இல்லை. முன் கூறியபடி இறை கிணறுகளைச்சுற்றி மட்டும் கொஞ்சம் பயிர் செய்கிறார்கள். இக்காலத்தில் அவர்களுக்கு ஓய்வு அல்லவா ? ஆகையால் கலியாணங்களைச் செய்கிறார்கள். சுற்றுப்புறங்களில் பெரிய ஊர்களில் நடக்கும் தேர், திரு விழாக்களுக்கும் போகிறார்கள்.

இவற்றிற்குப் பணம் தேவை அல்லவா ? அதற் காகத் தாம் பயிர்செய்து விளைத்த தானியங்களை வண்டி களில் ஏற்றிக்கொண்டு சமீபத்திலுள்ள பட்டணத்துக்குக் கொண்டு போகிறார்கள் ; காய் கறி முதலிய பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு போகிறார்கள். விற்றுப் பணம் பெறுகிறார்கள். அதைக்கொண்டு மேற்கண்ட செலவுகள் செய்கிறார்கள். அன்றியும் தங்களுக்கு வேண்டிய துணி மணிகளையும் தங்கள் ஊரில் விளையாதனவும் செய்யாதனவு மான பொருள்களையும் வாங்கிக் கொள்கிறார்கள்.

பயிற்சி

உங்கள் கிராமத்தாரின் வாழ்க்கையைக் கீழ்கண்ட கட்டத்தில் குறிக்க. ஒவ்வொரு பயிருக்கும் ஒன்று தயார் செய்க.

(1) பயிரின் பெயர்..

(2) நன்செயா ? புன்செயா ? ....

விவரம்.	மாதம்	அதன் பாகம்
1. உழவு	....	....
2. விதைப்பு	....	....
3. களைகொத்தல்	....	....
4. அறுவடை	....	....
5. விற்பனை	....	....

10. நகர சஞ்சாரம்

சில கிராமங்கள் பிற்காலத்தில் நகரங்கள் ஆகின்றன. ஏதாவது ஒரு காரணத்தால் ஓர் இடத்தில் விசேஷமான ஜனங்கள் வசிக்க வருகிறுர்கள். அதனுல் அனேக வீடுகள் அங்கே கட்டப்படுகின்றன. அந்த ஜனங்களின் சௌகரியத்துக்காக அனேக விதமான கடைகள் ஏற்படுகின்றன.

அவர்களுக்கு வேண்டிய துணிமணிகள் செய்யவும், வீடுகள் கட்டவும் அனேக ஆட்கள் வேண்டும் அல்லவா? அதனுல் பலவகையான தொழிலாளர்களும் அங்கே வந்து சேருகிறுர்கள். நெசவுத்தொழில், தச்சவேலை, தட்டாரவேலை, கன்னுரவேலை முதலியன நடைபெறுகின்றன.

பட்டணங்களில் செய்யப்படும் சாமான்களை வெளியூர்களுக்குக் கொண்டுபோகவும் வெளியூர்களிலிருந்து உணவுப் பொருள்களைப் பட்டணங்களுக்குக் கொண்டுவரவும் வண்டிக்காரர் வந்து சேர்கிறுர்கள். இவர்கள் தவிர உபாத்தியார், பாடகர், வித்துவான்கள் முதலியவர்களும் வருகிறுர்கள்.

இப்படித்தான் கிராமங்கள் பெரியனவாகி நகரங்கள் ஆகின்றன. இப்பொழுது நம் நாட்டில் பட்டணங்கள் எப்படி ஆயின என்று பார்க்கலாம்.

சில பட்டணங்கள் மிகவும் பழமையானவை. அவை முன்காலத்தில் நம் அரசர்களின் முக்கிய பட்டணங்களாக இருந்தன. தஞ்சாவூர், மதுரை முதலிய பட்டணங்கள் இப்படிப்பட்டவை. சில பட்டணங்கள் கோயில், குளங்கள் இருக்கும் இடங்களில் உண்டாயின. கும்பகோணம், திருப்



நகரம்.

பதி முதலியன இப்படி ஏற்பட்டவை. வியாபாரம், கைத்தொழில், தொழிற்சாலே, துறைமுகம், சுரங்கம், துரைத்தனத்தார் உத்தியோக சாலேகள், புகை வண்டிகளின் சந்திப்பு, கோடை வாசஸ்தலம் முதலியன உள்ள இடங்களிலும் பட்டணங்கள் ஏற்பட்டன. ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணம் தருக.

இப்பொழுது நாம் ஒரு நகரத்துக்குப் போய் வசிப்போம். அந்த ஜனங்களின் வாழ்க்கையைக் கவனிப்

போம். கிராமத்தாரின் வாழ்க்கை கால வேறுபாட்டுக்குத் தக்கபடி மாறுகின்றது அல்லவா? ஆனால் நகரத்தாரின் வாழ்க்கை அவ்விதம் மாறுவது இல்லை. எப்பொழுதும் அவரவர் வேலையைக் காலந் தவறாமல் விசேஷமாக ஒரே மாதிரியாகச் செய்து வருகிறார்கள்.

ஆனால் சில மாதங்களில் அவர்கள் வேலை நிதானமாகவும் சில மாதங்களில் சற்றும் ஓய்வின்றிப் பரபரப்புடனும் நடக்கிறது. பல சரக்கு மண்டிகளிலும் நெல் முதலியன அரைக்கும் தொழிற் சாலைகளிலும் அறுவடைக் காலங்களில் ஏராளமான வியாபாரம். அப்பொழுது வியாபாரிகளுக்குச் சற்றும் ஓய்வு இல்லை. மண்டிகள், ஜவுளிக் கடைகள், பாத்திரக் கடைகள் முதலியவற்றில் கலியாண காலங்களிலும் தேர், திருவிழா, பண்டிகைக் காலங்களிலும் ஓய்வற்ற வியாபாரம். இக் காலங்களில்தான் வண்டிக்காரருக்கும் அதிக கிராக்கி. பொதுவாகப் பட்டணத்தார் சற்று ஆடம்பரமான வாழ்க்கையும் கிராமத்தார் எளிய வாழ்க்கையும் நடத்துகிறார்கள்.

பயிற்சி

1. நீங்கள் வசிப்பது நகரமானால் அது எப்படி உண்டாயிற்று? சொல்.
2. அக்கம் பக்கத்திலுள்ள பட்டணங்கள் எப்படி உண்டாயின?
3. அங்குள்ள ஜனங்களின் வாழ்க்கையை நேரே கவனி.
4. கீழ்க்கண்ட நகரங்கள் எப்படி உண்டாயின?

(1) காஞ்சிபுரம்	(4) விழுப்புரம்
(2) உதகமண்டலம்	(5) கோயமத்தூர்
(3) சென்னை	(6) கோலார்


தச்சன்.


சேணியன்.

11. கைத்தொழில் பார்வை

கிராமங்களில் உழவருக்கு உதவியாகத் தொழிலாளிகளும் வசிக்கிறார்கள். நாம் இன்று அவர்கள் ஒவ்வொருவரையும் பார்க்கப் போவோம். அவர்கள் உழவருக்கு வேண்டிய பொருள்களை மேரைக்காகத் தயார் செய்கிறார்கள்; மற்றக் காலங்களில் கூலிக்குச் செய்கிறார்கள்; சொந்தமாகச் செய்தும் விற்கிறார்கள். சக்கிலியன், தச்சன், கருமான், குயவன் இவ்வகையில் சேர்ந்தவர்கள்.

இத்தொழிலாளர் தவிர, உழவருடன் மேரை சம்பந்த மற்ற தொழிலாளரும் பலர் வசிக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சேணியர். இவர்கள் பருத்தி அல்லது பட்டு நூல் வாங்கிவந்து, சாயமிட்டு, தறியில் ஏற்றித் துணி நெய்கிறார்கள். தட்டான், வாணியன், செம்படவன் முதலியவர்களும் இவ்வகையில் சேர்ந்தவர்கள். இவர்களைத் தவிர பல கூலியாட்களும் சிறு தொழிலாளரும்கூட கிராமங்களில் உண்டு. அவர்கள் சுவர் கட்டுதல், கிணறு

வெட்டுதல், மரம் வெட்டுதல், நாற்று நடுதல், களை கொத்தல், அறுவடை செய்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள்.

அவ்வக்காலங்களில் நடக்கும் தொழில்களும் சில உண்டு. வெல்லம் காய்ச்சல், புகையிலை பதனிடுதல் முதலியன இவ் வகையைச் சேர்ந்தவை.

காடுகளின் ஓரங்களில் உள்ள ஊர்களில் ஆடு மாடு மேய்த்தல் முக்கியத் தொழிலாகும். அங்கு ஆட்டு ரோமத்தால் சிலர் கம்பளம் நெய்கிறார்கள். நெசவுகாரர் தாம் செய்த பொருள்களை நகரங்களில் கடைகளுக்காவது தம் ஊருக்குச் சமீபத்தில் கூடும் சந்தைக்காவது கொண்டுபோய் விற்பார்கள். விற்றுவந்த பணத்துக்குத் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்வார்கள்.

பயிற்சி

ஒவ்வொரு தொழிலாளியும் வேலை செய்யும்போது நேரே போய்ப் பார். கீழ்க்கண்ட கட்டத்தைப் பூர்த்தி செய்.

தொழிலாளியின் வகை	கிராமத்தாருக்குச் செய்பவை	விற்பனைக்குச் செய்பவை	எங்கு விற்கிறான்?
1.	....	....	....
2.	....	....	....
3.	....	....	....
4.	....	....	....
5.	....	....	....



நெல் இயந்திரச்சாலை.

12. தொழிற்சாலை உலா

இன்று நாம் நகரத்தில் தொழில்கள் நடக்கும் இடங்களைப் பார்வையிடுவோம். கிராமங்களில் தொழிலாளிகள் தனித்தனியாக அவ்வக் குடும்பத்தார் மட்டும் செய்கிறார்கள். ஆனால் நகரங்களில் தொழிலாளர் பலர் ஒன்றுசேர்ந்து அவ்வவ் வேலையை ஒரு முதலாளியின் இடத்தில் சம்பளத்துக்கோ கூலிக்கோ செய்கிறார்கள்.

இவ்விதம் பல தொழிலாளர் ஒரு முதலாளியிடம் வேலை செய்யும் இடங்களுக்குத் தொழிற்சாலைகள் என்று பெயர். அவை இரண்டு வகைப்படும்: (i) பட்டடை (ii) இயந்திரசாலை.

தச்சர், கருமார், கன்னார் வேலைசெய்யும் தொழிற்சாலைகளே பட்டடைகள். இயந்திர சகாயத்தால் வேலை செய்யும் இடங்கள் இயந்திர சாலைகள். அரிசி அரைத்தல் மிளகாய், சீயக்காய் முதலிய தூள் அரைத்தல், அச்சடித்தல் முதலியன சாதாரணமாய் எல்லா நகரங்களிலும் நடக்கும்

தொழிற் சாலைகள். கடலைக்காய் அதிகம் பயிராகும் பிர தேசத்து நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் கடலைக்காய் உடைக்கும் இயந்திரசாலைகளும், பருத்தி ப்ரதேசத்து இடங் களில் பருத்திக் கொட்டை நீக்குபவை, நூல் நூற்பவை, துணி நெய்பவையும் இருக்கின்றன. இவ்விடங்களில் தயா ராகும் பொருள்களில் விசேஷமானவை வெளியூர்களுக்கு இரட்டை மாட்டுவண்டி, புகை வண்டி, மோடார் லாரிகள் மூலமும் அனுப்பப்படுகின்றன.

இவை தவிர நகரங்களின் ஓரங்களில் தோல் பதனிடும் தொழிற் சாலைகளும் பல விடங்களில் உண்டு. மோடாகார்கள் அதிகமாக நடமாடும் நகரங்களில் மோடார் வண்டிகளைப் பழுது பார்க்கும் தொழிற் சாலைகளும் வரவர உண்டாகிக் கொண்டு வருகின்றன.

பயிற்சி

ஒவ்வொருவகைத் தொழிற் சாலையையும் நேரே பார்க்க. கீழ்க் கண்ட விவரம் தருக.

நீங்கள் வசிக்கும் நகரம் (அல்லது) சமீபத்திலுள்ள நகரம். } ....

தொழிற்சாலைகளின் பெயர்	செய்யப் படும் பொருள் கள் (அ) வேலை	தொழிற் சாலை களின் எண் ணிக்கை	தொழி லாளரின் சுமார் எண் ணிக்கை	செய்யப்படும் பொருளின் பின் சரித்திரம் (என்ன, எங்கு ஆகின்றன ?)
1.	....	....	....	....
2.	....	....	....	....
3.	....	....	....	....



13. போக்கு வரவு

வியாபாரம் நன்ருக நடக்கப் பொருள்களை ஓர் இடத்தில் இருந்து மற்ற இடங்களுக்கு அனுப்ப நல்ல வசதிகள் இருக்கவேண்டும். புகை வண்டிகள் அப்படிப்பட்ட ஒரு நல்ல வசதி. பொருள்களை (Goods) சாமான்-வண்டிகளின் மூலம் மற்ற நகரங்களுக்குச் சீக்கிரமாக அனுப்பலாம். அதனுல் வியாபாரம் நடக்கும் பல பாகங்களிலும் இருப்புப் பாதைகள் அதிகமாக இருக்கின்றன. மோடார் லாரிகளிலும் சாமான்களை விரைவாக அனுப்பலாம். அவை போவதற்கு நல்ல சாலைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அவை எல்லா நகரங்களுக்கும் போகின்றன.

கிராமங்களில் விசேஷமானவை சாலைகளுக்குத் தொலைவில் இருக்கின்றன. அங்குள்ள சாமான்கள் விற்பனைக்கு நகரங்களுக்கு மாட்டு வண்டிகளில் கொண்டுவரப்படுகின்றன. அவை சாலைக்கு வரும் வரையில் மண் பாதைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே சாமான்கள் மாட்டு வண்டி

களின் மூலம் மண் பாதைகளில் வந்து, பிறகு சாலைகளில் போய், விற்பனைக்கு நகரத்தை அடைகின்றன.

இவ்விதம், வியாபாரத்துக்குப் புகை வண்டிகளும், மோடார் லாரிகளும், மாட்டு வண்டிகளும், இருப்புப் பாதைகளும், சாலைகளும், மண் பாதைகளும் உதவுகின்றன.

பயிற்சி

உங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள சாலைக்காவது அல்லது நகரத்திலிருந்து வெளியில் போகும் சாலைக்காவது போய்க் கீழ்க் கண்டவற்றைக் கவனி. அதே மாதிரி ரயில்வே ஸ்டேஷனிலும் கவனி. இக்கட்டங்களைத் தனியே வரைந்து பூர்த்திசெய்.

போகும் வண்டி களின் பெயர்	ஒரு நாளில் (1) போகும் (2) வரும் வண்டிகளின் எண்ணிக்கை		எங்கெங்கு போகின்றன?	வெளியே போகும் பொருள்கள்	எங்கிருந்து வருகின்றன?	வரும் பொருள்கள்	காரணம்
	(1)	(2)					

14. தரைப்படம்

ஒரு பொருளைக் கீழே வைத்து அது படிந்து இருக்கிறபடி கோட்டால் வரைந்து காட்டுவது தரைப்படம். அடுத்த பக்கத்தில் சில பொருள்களும் அவற்றின் தரைப் படங்களும் தரப்பட்டுள்ளன. இவை கடிதத்தைக் காட்டிலும் சிறிய பொருள்களாக இருப்பதால், அப்படியே கடிதத்தின்மீது வைத்து வரைந்து விடுகிறோம். ஆனால் பெரிய வஸ்துக்களை எப்படி வரைவது?

ஒரு பெட்டி 3 அடி நீளமும் 2 அடி அகலமும் இருந்தால், 3 அடிக்கு 3 அங்குலமும் 2 அடிக்கு 2 அங்குலமும் கொண்டு தரைப்படம் வரையலாம். அதாவது ஒரு அடி

நீளத்துக்கு ஒரு அங்குல விகிதம் கொண்டு படம் வரைய லாம். இதற்குப் **பரிமாணம்** என்று பெயர்.



அறையின் தரைப் படம்

இன்னும் நீள அகலங்கள் அதிகமாக உடையவற்றைத் தரைப்படம் வரைவதாய் இருந்தால் பரிமாணத்தை இன்னும் குறைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 20 அடி நீளமும் 15 அடி அகலமும் உள்ள ஒரு அறையின் தரைப்படம் வரையவேண்டுமானால் 1 அங்குலத்தைப் பத்து அடிகளுக்குச் சமமாகக் கொள்ளலாம். அப்பொழுது நீளம் 2 அங்குலமும் அகலம் 1½ அங்குலமும் இருக்கும்.



பொருள்களும் அவற்றின் தரைப்படங்களும்.

இவ்விதம் தரைப்படம் வரையும்போதும் படிக்கும் போதும் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனத்தில் வைக்க வேண்டும். இது பொதுவாக எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு அனுஸரிக்கப்படுகிறது; அதனால் நாமும் அம்மாதிரியே அனுஸரிக்கவேண்டும். அவையாவன:

படத்தின் திசைகள்

படத்தின் தலைப்பக்கம் வடக்கு.
நம் இடதுகைப்பக்கம் மேற்கு. நம வலதுகைப்பக்கம் கிழக்கு.
படத்தின் கீழ்ப்பக்கம் தெற்கு.

இம் முறையை நாம் அனுஸரித்ததற்கு அடையாள மாக † இவ்விதமான குறிபோடுவது வழக்கம். அதை மேல்கண்ட தரைப்படத்தில் குறிக்க.

பயிற்சி

லாடம், காலணு இவற்றின் தரைப்படம் வரைக. வடக்கு தெற்காக 80 அடி நீளமும, கிழக்கு மேற்காக 15 அடி அகலமுமுள்ள ஒரு அறையின் தரைப்படத்தை, அங்குலப் பரிமாணத்தாலும் ஸெண்டிமீடர் பரிமாணத்தாலும் வரைக.

15. ஊர்ப்படம்

நீங்கள் வகுப்பின் தரைப்படம் வரைந்தது போலவே துரைத்தனத்தாரும் ஒவ்வொரு ஊரையும் அளந்து பரிமாண முறையை அனுஸரித்துத் தரைப்படம் வரைந்து இருக்கிறார்கள். அவ்விதம் வரைந்த தரைப்படம் ஒன்று எதிர்ப்பக்கத்தில் இருக்கிறது. அதையும் அதன் கீழ் உள்ள குறிகளையும் கவனியுங்கள். படத்தில் உள்ள ஊர்கள் யாவை? அவற்றில் இருந்து எங்கெங்குப் பாதைகள் போகின்றன? நெல் மிஷின், சந்தை, தோப்பு, கோவில், மசூதி, *மலை, †ஆறு. ஏரி எங்கெங்கே இருக்கின்றன?

* மலைகள் ஒன்றுக்குள் ஒன்றாக வரையப்பட்டுள்ள சமமட்டக் (Contour lines) கோடுகளால் காட்டப்பட்டு உள்ளன.

† நீர்நிலைகள் (ஏரி, குளம், குட்டை) சுற்று வளைவு கோட்டினால் காட்டப்பட்டுள்ளன.



Adapted from Survey of India Map No. 57 P 5 with the kind permission of the Surveyor-General, Delhi.

இச் சிறிய படத்தையும் கவனியுங்கள். இதுவும் முன்பார்த்த நிலபாகத்தின் படம்தான். ஆனால் மிகவும் குறைந்த பரிமாணம் கொண்டது. அதாவது 4 மைல் நீளத்தை ஒரு அங்குலமாகக்கொண்டு வரையப்பட்டு இருக்கிறது. இதில் பெரிய படத்தில் காட்டின எல்லாவற்றையும்காட்டமுடியாதல்லவா? ஆகையால் மிகவும் முக்கியமானவற்றை மட்டும் காட்டி இருக்கிறார்கள். அவற்றையும் சுருக்கிக் காட்டி இருக்கிறார்கள். இப்படித்தான் ஒரு பெரிய பூபாகத்தைச் சிறிய படத்தில் காட்டும்போது எல்லா இடங்களையும் காட்டமுடியாது. அதனால் பெரிய இடங்களை மட்டும்தான் காட்டுவார்கள். அவற்றையும் சிறிய புள்ளிகளால் காட்டுவார்கள். ஆனால் உண்மையில் அந்நகரங்கள் பெரியவையே. இப்போது இரண்டு படங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள். எந்த இடங்களைக் காட்டி இருக்கிறார்கள்? எந்தப் பாட்டைகளைக் காட்டி இருக்கிறார்கள்?



பயிற்சி

நீங்களும் உங்கள் ஊர்ப் படத்தைப் பார்த்து உங்கள் ஊரில் உள்ள கட்டடங்கள், வெளியூர்களுக்குப் போகும் பாதைகள், ஏரி, ஆறு, கால்வாய் முதலியவற்றைக் காட்டுங்கள். படத்தை வெளியே எடுத்துப்போய் அந்தந்த இடத்தில் வைத்துக்கொண்டு படத்தை அதனுடன் ஒத்திட்டுப் பாருங்கள். ஒரு மலை அல்லது கோபுரத்தின்மேல் ஏறி, சர்வே படத்துடன் ஒத்திட்டுப் பார்த்து, சுற்றுப்புறமுள்ள ஊர்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் போக வழியும் சொல்லுங்கள். ஒன்றுக்கு ஒன்று உள்ள தூரத்தையும் படத்தில் அளந்து கணக்கிட்டுச் சரியாகச் சொல்லுங்கள்.

16. தாலுக்கா வர்ணனை

இந்தப் பாடத்தில் காலியான இடங்களில் விவரம் எழுதுங்கள். ஒரு பெரிய அட்டையில் அவற்றைக் குறித்து வகுப்புச் சுவரில் மாட்டுங்கள். அதன் பக்கத்தில் தாலுக்கா படங்களையும் மாட்டுங்கள். வெளியூர்களுக்குப் போகுமுன், அவற்றிற்கு வழி, அவை எப்படிப் பேர்போனவை என்று படங்களையும் விவரங்களையும் பார்த்து அறிந்துகொள்ளுங்கள்.

நமது தாலுக்கா

1. நம் தாலுக்காவின் பெயர்..
2. அதன் எல்லைகளில் உள்ள

தாலுக்கா அல்லது ஜில்லா	திக்கு
....	வடக்கு
....	கிழக்கு
....	தெற்கு
....	மேற்கு

3. மலைகளின் பெயர்கள்*..
   இருக்கும் பாகங்கள்*..
   அருகில் உள்ள பெரிய ஊர்கள்*..
4. நதிகளின் பெயர்கள்*..
   பாயும் பாகங்கள்*..
   கரையில் உள்ள பெரிய ஊர்கள்*..

(இவற்றை நம் தாலுக்கா படத்தில் குறிக்க).

5. நன்செய் நிலம் அதிகமான பாகம்..
6. புன்செய் நிலம் அதிகமான பாகம்..
7. பழத்தோட்டங்கள் உள்ள பாகம்..
8. தென்னை, பனை முதலியன உள்ள பாகம்..

9. அதிகமாகப் பயிராகும் பொருள்கள்*..........................

....

பயிராகும் பாகங்கள்* ....

....

10. முக்கியத் தொழில்கள்*..

நடக்கும் பாகங்கள்*...

(இன்னொரு தாலுக்கா படம் வரைந்து இவற்றைக் குறிக்க.)

11. பாட்டைகள் போகும் பட்டணங்கள்*...........................

கரையிலுள்ள ஊர்கள்*..

12. இருப்புப்பாதை போனால்,

ரெயில்வே ஸ்டேஷன்கள்	ஏற்றுமதி	இறக்குமதி
....	....	....
....	....	....

(இவற்றையும் ஒரு படத்தில் குறிக்க).

13. பாட்டைகளில் போகும் வஸ்துக்கள்*...........................

போகும் இடங்கள்*..

14. பெரிய ஊர்கள்*..

எதற்குப் பேர்போனவை*...

புண்ணிய க்ஷேத்திரங்கள்*.......................................

பிரசித்திக்குக் காரணங்கள்*.....................................

சந்தைகள் கூடும் ஊர்கள்*.......................................

கிழமைகள்*..

(இவற்றையும் ஒரு படத்தில் காட்டுக).

---

* 1, 2 எனக் குறித்துக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் விவரம் தருக.

(உ-ம்.) குடியாத்தம் தாலுக்கா

4. (i) கௌண்டின்ய நதி	மேல் பாகம்	குடியாத்தம்
(ii) பொன்னியான்	கீழ்ப்பாகம்	திருவலம்

வட ஆற்காடு ஜில்லா
இயற்கை அமைப்பு
சித்தூர் ஜில்லா
செங்கற்பட்டு ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
சேலம் ஜில்லா
குடியாத்தம் தாலுக்கா
வேலூர் தாலுக்கா
வாலாஜா தாலுக்கா
அற்கோணம் தாலுக்கா
செய்யாறு தாலுக்கா
திருப்பத்தூர் தாலுக்கா
போளூர் தாலுக்கா
வந்தவாசி தலுக்கா
செங்கம் தாலுக்கா
திருவண்ணமலை தாலுக்கா
பாலாறு
செய்யாறு
3000 அடி
1200 அடி
000 அடி
கடல்மட்டம்

வட ஆர்க்காடு ஜில்லா

---

1. நம் ஜில்லாவின் பெயர்

நாம் சென்ற பாடத்தில் நம் தாலுக்காவைப்பற்றிப் படித்தோம் அல்லவா? நம் தாலுக்காவின் பெயர் என்ன? அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?

நம் ஊரில் ஒரு தெருவில் பெரிய பணக்காரர் ஒருவர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அத்தெரு அவர் பெயராலேயே வழங்குகின்றது. மணியகாரர் இருக்கும் தெருவை நாம் 'மணியகாரர் தெரு' என்கிறோமல்லவா? அப்படி என்றால், அந்தத் தெருவில் மணியகாரர் வீடு இருக்கிறது என்று பொருள்; ஆனால் அந்தத் தெரு முழுதும் மணியகாரருக்குச் சொந்தம் என்பது பொருள் அல்ல.

அதே மாதிரி ஒரு ஊரைச் சுற்றியுள்ள வயல்கள், தோப்புகள், மலைகள் முதலியவற்றையும் அந்த ஊருடனேயே சேர்த்துச் சொல்வது வழக்கம். ஊரைச்சுற்றி உள்ள ப்ரதேசம் எதுவரையில் அந்த ஊரைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்க ஒரு வழி வேண்டும் அல்லவா? அதற்காக ஊரின் எல்லைகளில் சர்க்கார் எல்லைக் கற்களை நட்டு இருக்கிறார்கள். அவை எந்த ப்ரதேசம் எந்த ஊருடன் சேரவேண்டும் என்று காட்டுகின்றன.

அப்படியே சர்க்கார் பல ஊர்களையும் ஒன்று சேர்த்து அந்தப் பிரதேசத்தை ஒரு பகுதி ஆக்குகிறார்கள். அதற்குத்

தாலுக்கா என்று பெயர் வைக்கிறார்கள். சாதாரணமாக அந்த பிரதேசத்தில் உள்ள பெரிய ஊரின் பெயரையாவது அல்லது மத்தியிலுள்ள ஊரின் பெயரையாவது அதற்கு வைக்கிறார்கள். நம் பகுதிக்கு*..............தாலுக்கா என்று பெயர். இதற்குக் காரணம் என்ன? அந்த ஊரில் நம் தாலுக்காவை ஆளும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அதனால் அது நம் தாலுக்காவுக்குத் **தலைநகர்** ஆகிறது.

உத்தியோகஸ்தர்களில் முக்கியமானவர் தாசில்தார். கூட்டுறவு இன்ஸ்பெக்டர், விவசாய உத்தியோகஸ்தர், சுகாதார உத்தியோகஸ்தர், பாடசாலை இன்ஸ்பெக்டர், நீர் பாசன ஓவர்சியர் முதலியவர்கள் மற்றவர்கள். அவர்கள் தத்தம் இலாகா வேலையை அத்தாலுக்காவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கவனிக்கிறார்கள்.

சர்க்கார் பல தாலுக்காக்களை ஒன்றாகச் சேர்த்து ஜில்லா ஆக்குகிறார்கள். நம் ஜில்லாவில்,

(1) வேலூர் தாலுக்கா	(6, வந்தவாசி தாலுக்கா
(2) குடியாத்தம் தாலுக்கா	(7) போளூர் தாலுக்கா
(3) வாலாஜாபேட்டைத் தாலுக்கா	(8) திருவண்ணாமலை தாலுக்கா
(4) அரக்கோணம் தாலுக்கா	(9) செங்கம் தாலுக்கா
(5) செய்யாறு தாலுக்கா	(10) திருப்பத்தூர் தாலுக்கா

ஆகிய பத்துத் தாலுக்காக்களையும் **ஆரணி** ஜாகீரையும் சேர்த்து இருக்கிறார்கள்.

ஒரு ஜில்லாவிலுள்ள பட்டணங்களில் பெரியதாக இருக்கும் அல்லது மத்தியிலிருக்கும் பட்டணத்தைத் தலைநகர் ஆக்குகிறார்கள். அதுவே அத் தாலுக்காவுக்கும் தலைநகராக இருக்கும். அங்கே ஜில்லாவை ஆளும் உத்தியோகஸ்தர்களை வைக்கிறார்கள். அவர்கள் அந்த அந்த

---

* உங்கள் தாலுக்காவின் பெயர் குறித்துக்கொள்க.

தாலுக்கா உத்தியோகஸ்தர்களைக்கொண்டு அந்த அந்த தாலுக்காவை ஆளுகிறார்கள். நம் ஜில்லாவில் அப்படிப் பட்டது வேலூர். எனவே வேலூர்தான் நம் ஜில்லாவின் தலைநகர்; அங்கேதான் ஜில்லா அதிகாரிகள் இருக்கிறார்கள்.

நம் ஜில்லாவுக்கு வட ஆர்க்காடு ஜில்லா என்று பெயர். ஏனென்றால் நம் ஜில்லாவும் தென் ஆர்க்காடு ஜில்லாவும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்யுமுன் ஒரே ஜில்லாவாய் இருந்தது. அப்பொழுது ஒரு நவாப் ஆர்க்காட்டைத் தலைநகராய்க்கொண்டு இப்பிரதேசத்தை ஆண்டுவந்தார். ஆங்கிலேயர் ராஜ்யம் ஸ்தாபித்தபிறகு இந்த ஜில்லாவை இரண்டாகப் பிரித்துவிட்டார்கள். வட பாகத்துக்கு வட ஆர்க்காடு ஜில்லா என்றும், தென் பாகத்துக்குத் தென் ஆர்க்காடு ஜில்லா என்றும் பெயர் வைத்தார்கள்.

ஆர்க்காடு, வட பாகத்தில் உள்ளது என்றாலும் அது புது ஜில்லாவின் மத்திய ஸ்தானத்தில் இல்லாததால், அதற்குப் பதில் வேலூரைத் தலைநகராக ஏற்படுத்தினார்கள். அதனால்தான் ஆர்க்காடு வட ஆர்க்காடு ஜில்லாவின் தலைநகராக இல்லாமல் வேலூர் தலைநகராக இருக்கிறது. தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஆர்க்காடு இல்லை. அங்குத் தலைநகரம் கடலூர் என்னும் பட்டணம்.

2. இயற்கை அமைப்பு

நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். இதன் மேற்கில் சேலம் ஜில்லாவும், வடக்கிலும் வடமேற்கிலும் சித்தூர் ஜில்லாவும், கிழக்கில் செங்கல்பட்டு ஜில்லாவும், தெற்கில் தென் ஆர்க்காடு ஜில்லாவும் இருக்கின்றன.

மறுபடியும் படத்தைப் பாருங்கள். பசுமை நிறமாய் இருக்கும் பாகம் சமவெளி பிரதேசம். இது அதிக உயரமாக இல்லை. மஞ்சள் நிறமாய் இருக்கும் பாகம் மேட்டு பிரதேசம். கபில நிறமாய் இருக்கும் பாகம் மலைப் பிரதேசம். இப்பொழுது அடியில் கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

(1) சமவெளி எங்கே இருக்கிறது?
(2) மேட்டு நிலம் எங்கே இருக்கிறது?
(3) மலைகள் எங்கே இருக்கின்றன?

நம் ஜில்லாவின் தென்மேற்குப் பாகம் மேட்டு நிலம். மீதிப் பாகம் சமவெளி. மேட்டு நிலத்தில் ஜவ்வாது மலைகள் என்னும் மலைக் கூட்டங்கள் இருக்கின்றன.

எனவே நம் ஜில்லாவை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) சமவெளிப் பிரதேசம்.
(2) மேட்டுப் பிரதேசம்.
(3) ஜவ்வாது மலைப் பிரதேசம்.

சமவெளியின் வட பாகத்தில் பாலாறும் தென் பாகத்தில் செய்யாறும் பாய்கின்றன.

நம் ஜில்லாவின் படம் வரைந்து மேற்கண்ட பிரதேசங்களைக் காட்டுக.

3. சீதோஷ்ணஸ்திதி, மழை

நமது ஜில்லா சமுத்திரக்கரையில் இல்லை; உள்நாட்டில் இருக்கிறது. அதனால் இது உஷ்ணமாக இருக்கிறது. கோடைக் காலத்தில் சமவெளியில் அதிக உஷ்ணமாக இருக்கும். மேட்டு பிரதேசத்தில் உஷ்ணம் சற்றுக் குறை

வாக இருக்கும். குளிர் காலத்தில் சமவெளியில் குளிர் சாதாரணமாய் இருக்கும். மேட்டு பிரதேசத்தில் குளிர் அதிகமாக இருக்கும். இதற்குக் காரணத்தை நீங்கள் மேல் வகுப்புகளில் அறிவீர்கள்.

நம் ஜில்லாவின் கிழக்குப்பாகம் சமுத்திரக் கரையில் இல்லாவிட்டாலும், வங்காளக் குடாக்கடலுக்குச் சமீபத்தில் இருக்கிறது. நம் ஜில்லாவுக்கும் வங்காளக் குடாக்கடலுக்கும் மத்தியில் செங்கல்பட்டு ஜில்லா இருக்கிறது. அதனுல் சமுத்திரக் காற்று செங்கல்பட்டு ஜில்லாவின் வழியாக நம் ஜில்லாவின் கிழக்குப் பாகத்தில் வீசி சுமாரான மழை தருகிறது. அக்காற்று மேற்குப் பாகத்தில் வீசும்போது அதிலுள்ள நீராவி குறைந்து விட்டு இருப்பதால் மேற்குப் பாகத்தில் சற்றுக் குறைவான மழை பெய்கிறது. இம்மழை ஐப்பசி முதல் மார்கழி வரையில் பெய்யும். அப்பொழுது காற்று வடகிழக்கிலிருந்து அடிக்கும்.

ஆனி முதல் புரட்டாசி மாதம் வரையிலும் கூட மழை பெய்கிறது. அது மேற்கிலுள்ள அரபிக்கடலில் இருந்து வீசும் காற்றினுல் பெய்கிறது. இக்காற்று தென்மேற்கிலிருந்து அடிக்கும். எனவே நமக்கு ஆனிமுதல் கார்த்திகை மாதம் வரையில் மழைக்காலமாகும். மார்கழி, தை, மாசி, மாதங்கள் குளிர்காலமாகும். பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் வெயிற் காலமாகும்.

4. சமவெளிப் பிரதேசம்

இப்பிரதேசத்தில் குடியாத்தம் தாலுக்காவின் தென் பாகம், வாலாஜா, அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி தாலுக்காக்கள், ஆரணி ஜாகீர், போளூர் தாலுக்காவின் தென்கிழக்குப் பாகம், திருவண்ணுமலை தாலுக்காவின்

கீழ்ப்பாகம் அடங்கி இருக்கின்றன. இப் பிரதேசத்தை இரண்டாகப் பிரித்துக்கொள்ளலாம். (1) வட சமவெளிப் பிரதேசம். (2) தென்கிழக்குச் சமவெளிப் பிரதேசம்.

வடசமவெளிப் பிரதேசத்தில் **பாலாறும்** அதன் உப நதிகளும் பாய்கின்றன. எனவே அதைப **பாலாற்றுப் பிரதேசம்** எனலாம். தென்கிழக்குச் சமவெளிப் பிரதேசத்தில் **செய்யாறும்** அதன் உப நதிகளும் பாய்கின்றன. அதனால் அதைச் **செய்யாற்றுப் பிரதேசம்** எனலாம். மேற்குப் பாகத்தில் இவற்றிற்கு இடையில் ஜவ்வாது மலைகளும், கணியப்பாடி கண்ணமங்கலம் குன்றுகளும் இருக்கின்றன. நதிகள் பாயும் திக்குகளைக் கவனித்துப பூமி எங்கெங்கு எவ்வெப் பக்கம் சரிந்திருக்கிறது என்று சொல்லுங்கள்.

(1) பாலாற்றுப் பிரதேசம் :

பாலாறு மைசூர் இராஜ்ஜியத்திலிருந்து நம் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. இது குடியாத்தம், வேலூர், வாலாஜா, செய்யாறு, தாலுக்காக்களின் வழியாகப் பாய்ந்து செங்கல்பட்டு ஜில்லாவை அடைகிறது.

இதில் இரண்டு பெரிய உபநதிகள் வந்து கலக்கின்றன. அவை இரண்டும் சித்தூர் ஜில்லாவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகித் தெற்கே பாய்ந்து நதியின் வடபுறத்தில் கலக்கின்றன. **கௌண்டின்ய நதி** பள்ளிகொண்டை என்னும் ஊருக்குச் சமீபத்திலும், **பொன்னியாறு** விஷாரம் என்னும் ஊருக்குச் சமீபத்திலும் கலக்கின்றன.

பாலாற்றில் எப்போதும் ஜலம் ஓடுவதில்லை. மழைக் காலத்தில் மட்டும் வெள்ளம் வரும். அப்பொழுது அதை ஏரிகளுக்குத் திருப்பித் தேக்கி வைத்துக்கொண்டு பயிர்களுக்கு உபயோகிக்கிறார்கள். இவ்விதம் தண்ணீரை ஏரிகளுக்குத் திருப்பப் புதுப்பாடி என்னும் இடத்தில் ஆற்


வட ஆற்காடு ஜில்லா
விளை பொருள்கள்

றில் ஓர் அணையைக் கட்டி இருக்கிறார்கள். அதேமாதிரி பொன்னி யாற்றிலும் பொன்னை என்னும் ஊருக்குச் சமீபத்தில் கட்டி இருக்கிறார்கள். ஆறுகள் வறண்டு இருக்கும்போது அவற்றில் ஊற்றுக்கால்களைத் தோண்டி அந்தத் தண்ணீரைப் பயிர்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

ஆற்றுப் பிரதேசத்தில் நீர்வளம் இருப்பதால் நெல், வெற்றிலை, கரும்பு, தென்னை, மா விசேஷமாகப் பயிராகின்றன. தண்ணீர் சௌகரியம் இல்லாத விடங்களில் புன்செய்ப் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு. வேர்க்கடலை முதலியன பயிராகின்றன. வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப் படுகின்றது.

தொழில்கள் :

இப் பிரதேசத்தில் முக்கியமான தொழில் பயிர் செய்வதாகும். வெல்லம் செய்தலும், தோல் பதனிடுதலும், நெசவுத் தொழிலுங்கூட இப் பிரதேசத்தில் நடைபெறுகின்றன.

இப் பிரதேசத்தில் இருப்புப்பாதையும் பல ரஸ்தாக்களும் செல்வதால் போக்குவரவு சுலபமாக இருக்கிறது. வியாபாரமும் நன்றாக நடக்கிறது.

முக்கிய ஊர்கள் :

வாணியம்பாடி : பாலாற்றின் கரையிலுள்ள பெரிய வியாபார ஸ்தலம்; ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு மகமதியரால் ஒரு காலேஜ் நடத்தப்படுகிறது. இங்கு முக்கியமான வேலை தோல் பதனிடுதல். இதன் அருகிலுள்ள மலைகளில் பயிராகும் வாரை, மூங்கில் முதலிய காட்டுப் பொருள்கள் இங்கே ஏற்றுமதியாகின்றன. இங்கு ஒரு வாரச் சந்தை கூடுகின்றது.

ஆம்பூர் : இது ஒரு பெரிய ஊர்; பாலாற்றின் கரையில் இருக்கிறது. இங்கும் மஹமதியர்கள் அதிகம். இதுவும் ஒரு வியாபார ஸ்தலம். இதன் சுற்றுப் புறங்களில் தென்னையும் பழங்களும் விசேஷமாகப் பயிராகின்றன. தோல் பதனிடுதலும் அதிகமாக நடைபெறுகின்றது. இங்கே மூன்று ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.

துத்திப்பட்டு : இது ஆம்பூருக்கு வடக்கில் பாலாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது. இவ்விடத்தில் நல்ல விசிறிகள் செய்கிறார்கள்.

பேரணம்பட்டு : இது ஆம்பூருக்கு வடக்கே 12 மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஒரு பெரிய கிராமம். இங்கும் மஹமதியர்கள் அதிகம். இங்குத் தோல் பதனிடுதல், வெல்லம், பழுப்புச் சர்க்கரை செய்தல் முக்கியமான தொழில்கள். புளி, தோல், வெல்லம், வெற்றிலை முதலியன வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வூருக்கு மேல்பட்டி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து போகவேண்டும்.

மேல்பட்டி : இங்கு சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது.

சாத்கூர் : இது நல்ல சீனிப்பழத்துக்குப் பேர் போனது.

குடியாத்தம் : இது கௌண்டின்ய நதியின் கரையில் இருக்கும் ஒரு நகரம்; ரயில்வே ஸ்டேஷன். இது ஆம்பூருக்கு வடகிழக்கில் 24 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கும் மஹமதியர்கள் அதிகம். நெசவுத்தொழில் விசேஷம். சுற்றுப் புறங்களில் கரும்பு, புகையிலை பயிராகின்றன. புகையிலை, வெல்லம், புளி, தோல் முதலிய பொருள்களில் விசேஷ வியாபாரம் நடக்கிறது. இவ்வூரில் ஒரு ஹைஸ்கூலும் ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தப்பட்ட போதனாமுறைப்

பாடசாலையும் இருக்கின்றன. பிரதி செவ்வாய்க்கிழமையும் ஒரு சந்தை கூடுகின்றது. இங்கிருந்து வேலூர், ஆம்பூர், காட்பாடி, சித்தூர் முதலிய இடங்களுக்குப் பாதைகள் போகின்றன. இவ்வூருக்குச் சமீபத்தில் கரும்பு பயிர் செய்யும் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றைத் துரைத்தனத்தார் நடத்துகிறார்கள்.

பள்ளிகொண்டை : இது குடியாத்தத்துக்குத் தெற்கில் 5 மைல் தூரத்தில் பாலாற்றின் தென்கரையில் இருக்கிறது. இங்குத்தான் கொண்டின்ய நதி பாலாற்றில் கலக்கிறது. இங்கு ஒரு பெயர்பெற்ற ஸ்ரீரங்கநாதர் கோயில் இருக்கிறது. இவ்விடத்தில் வேலூர் — ஆம்பூர் பாதையிலிருந்து குடியாத்தம் போகும் பாதை பிரிகிறது. இதனால் அவ்வூரின் வழியாகப் போக்குவரவு அதிகம். இவ்வூரைச்சுற்றி வெற்றிலை விசேஷமாகப் பயிராகிறது.

மஹாதேவமலை : இது குடியாத்தத்துக்குக் கிழக்கில் 8 மைல் தூரத்தில் காவனூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கிறது. இங்கு ஒரு மலையின்மேல் ஒரு சிவாலயம் இருக்கிறது. அங்குப் பிரதிதினமும் திருக்கழுக்குன்றத்திலிருந்து கழுகுகள் வந்து உணவு உண்டு போகின்றன என்று எண்ணுகிறார்கள். அதனால் இங்கே யாத்ரீகர்கள் செல்கிறார்கள்.

விரிஞ்சிபுரம் : இது பள்ளிகொண்டைக்குக் கிழக்கில் 6 மைல் தூரத்தில் பாலாற்றின் தென்கரையில் இருக்கிறது. இங்கு மார்க்கசகாய ஈசுவரரின் சிறந்த ஆலயம் ஒன்று இருக்கிறது. இங்குக் கார்த்திகை மாதம் ஏராளமான யாத்ரீகர் வருகிறார்கள். வேலூர் — ஆம்பூர் பாதை இதன் ஓரமாகப் போகிறது.

காட்டுப்பாடி : இது வேலூருக்கு வடக்கில் 4 மைல் தூரத்தில் இருக்கிறது. ஒரு ரயில்வே ஜங்ஷன். இங்கி

ருந்து கிழக்கே சென்னைக்கும் மேற்கே பெங்களூருக்கும் வடக்கே சித்தூருக்கும் தெற்கே திருவண்ணுமலைக்கும் இருப்புப்பாதைகள் போகின்றன. குடியாத்தம், இராணிப் பேட்டை, வேலூர், சித்தூர் முதலிய இடங்களிலிருந்து வரும் பாதைகள் இங்கே கூடுகின்றன. இவ்விடத்தில் ரயில் வண்டி மூலம் விசேஷமான ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறுகின்றது. இவ்வூரைச் சுற்றி விசேஷமான எலுமிச்சந் தோட்டங்கள் இருக்கின்றன. இங்குப் பிரதி சனிக்கிழமை

காட்பாடி பண்ணையில் பிள்ளைகளால் அறுவடை

யும் ஒரு சந்தை கூடுகின்றது. இவ்வூருக்குச் சமீபத்தில் பாதிரிமார் நடத்தும் ஒரு தொழிற்சாலையும் விவசாயப் பண்ணையும் போதனுமுறைப் பாடசாலையும் இருக்கின்றன. விவசாயப் பண்ணையில் ஏராளமான ஜாதிக் கோழிகளை வளர்க்கிறுர்கள். நூதன முறைகளை அனுஸரித்துப் பயிர் செய்யவும் மாணவர்களுக்கு கற்பிக்கிறுர்கள்.

வேலூர் : இது ஜில்லாவின் தலைநகரம். பாலாற்றின் தென் கரையில் இருக்கிறது. இங்கு அகழியினல் சூழப்

பட்ட ஒரு பெரிய பலமான பழைய கோட்டை இருக்கிறது. அதனுள் துரைத்தனத்தாரின் காரியாலயங்கள் பலவும் அதிக வேலைப்பாடமைந்த கோவிலும் போலீஸார் பயிற்சிப் பாடசாலையும் இருக்கின்றன. இந்நகரில் விசேஷமான வியாபாரம் நடக்கிறது. செம்பு, பித்தளைப் பாத்திரங்களும், பொன், வெள்ளி நகைகளும் செய்யப்படுகின்றன. இங்கு ஒரு காலேஜும், நான்கு ஹைஸ்கூல்களும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பெண்களுக்காகவும், ஒன்று மஹமதியர்களுக்காகவும் ஏற்பட்டவை. இந்த ஊருக்குச் சமீபத்தில் தொரப்பாடி என்னுமிடத்தில் ஒரு பெரிய சிறைச்சாலை



வேலூர் கோட்டையும், அகழியும்

இருக்கிறது. அங்கு நல்ல கம்பளங்கள் நெய்கிறார்கள். இங்கிருந்து ஆரணி, திருவண்ணாமலை, ஆம்பூர், சித்தூர், ஆர்க்காடு முதலிய இடங்களுக்குப் பாதைகள் போகின்றன. காட்பாடி — திருவண்ணாமலை இருப்புப்பாதை இதன் மூலமாகப் போகிறது. இந்த ஊரைச் சேர்ந்து இரண்டு ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

திருவலம்: இது காட்பாடிக்குக் கிழக்கில் 8 மைல் தூரத்தில் பொன்னியாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு

வில்வநாதரின் ஆலயம் உண்டு. இவ்வூரில் விவசாயம் நன்முக நடக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்குப் பிரதி வியாழக்கிழமையும் ஒரு சந்தை கூடுகின்றது. இதனருகில் பொன்னியாற்றைக் கடக்க ஒரு பெரிய பாலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

லாலாபேட்டை : இது ஒரு பெரிய கிராமம். இங்கு ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது. முன் காலத்தில் இது வியாபாரத்துக்குப் பெயர் பெற்றிருந்தது.



வேலூர் ஊர்ஹீஸ் காலேஜ்

பொன்னை : இது பொன்னையாற்றின் கரையில் அணைக்கட்டுக்குச் சமீபத்தில் இருக்கிறது. இங்கு ஒரு பழைய கோட்டை உண்டு. சித்தூரிலிருந்து சோளிங்கபுரம் போகும் பாதை இதன் ஓரமாகச் செல்லுகிறது.

சோளிங்கபுரம் : இது ரயில்வே ஸ்டேஷனுக்கு 8 மைல் தூரத்தில் இருக்கிறது. சித்தூர், ஆர்க்காடு, அரக் கோணம், காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களிலிருந்து பாதைகள் இங்கு வருகின்றன. இவ்வூருக் கருகில் ஒரு

மலையின்மேல் நரசிங்கசுவாமி கோயில் இருக்கிறது. அங்கு ஜனங்கள் பிரார்த்தனை செலுத்தத் திரள்திரளாக வருகிறார்கள். இன்னொரு குன்றின்மேல் ஆஞ்சநேயர் கோயில் இருக்கிறது. அங்கும் ஜனங்கள் ஏராளமாக வருகிறார்கள். இங்குப் பாதிரிமார் நடத்தும் ஒரு மிடில் ஸ்கூலும் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

மின்னல்: இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு நெசவுத் தொழில் அதிகம்.

அரக்கோணம்: இது அத்தாலுக்காவின் தலைநகர். சோளிங்கபுரத்துக்கு வடகிழக்கில் இருக்கிறது. இது ஒரு பெரிய ரயில்வே ஜங்க்ஷன். பம்பாய், சென்னை, பெங்களூர், காஞ்சிபுரம் முதலிய இடங்களுக்குப் போகும் இருப்புப்பாதைகள் இங்குக் கூடுகின்றன. இங்கு பாதிரிமார் நடத்தும் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. ஒரு ரயில்வே தொழிற்சாலையும் உண்டு. அதில் சுமார் ஆயிர ஜனங்கள் வேலை செய்கின்றனர்.

தக்கோலம்: இது அரக்கோணத்துக்குத் தெற்கில் 6 மைல் தூரத்தில் அரக்கோணம்—செங்கல்பட்டு இருப்புப் பாதையின் அருகில் இருக்கிறது. இங்கு ஒரு சிவாலயம் உண்டு. அதன் அருகில் அமைத்துள்ள கல்லாலான நந்தியின் வாயிலிருந்து சுத்த ஜலம் வந்துகொண்டே இருக்கிறது. இது ஒரு சிற்றாற்றின் கரையிலிருக்கிறது. இவ்வூரில் கைக்கோளர் அதிகம். நெசவுத் தொழிலும் அரிசி வியாபாரமும் இங்கு விசேஷம்.

நெமிலி: இங்கு நெசவுத் தொழில் நடக்கிறது. ஒரு சிவாலயமும் உண்டு. இவ்வூரின் ஓரமாகக் காவேரிப்பாக்கத்து ஏரியின் கோடியில் உற்பத்தியாகும் ஒரு சிற்றாறு பாய்கிறது. அதன் தண்ணீர் பயிர்களுக்கு உபயோகிக்கப்படுகிறது.

பனப்பாக்கம்: இங்குக் கைக்கோளர் விசேஷம். நெசவுத்தொழில் அதிகமாக நடைபெறுகின்றது. இவ்வூரில் ஒரு சிறந்த சிவாலயம் இருக்கிறது.

மகேந்திரவாடி: இந்த ஊரின் கிழக்கில் கீழ்வீதி என்ற ஓர் ஊர் இருக்கிறது. இது முன்னொரு காலத்தில் மகேந்திரவாடியைச் சேர்ந்து இருந்தது. அக்காலத்தில் இது பல்லவ அரசர்களுக்கு முக்கியமான இடமாக இருந்தது. இதைச் சார்ந்த இடங்களில் முற்காலத்துக் கட்டடங்களின் சின்னங்கள் காணப்படுகின்றன. பாறையில் சிற்ப வேலை யமைந்த கோயில் குடையப்பட்டுள்ளது. இவ்வூருக்கு அருகில் முன்காலத்தில் காவேரிப்பாக்கத்து ஏரியை விடப் பெரிய ஏரி இருந்திருக்கவேண்டும்.

காவேரிப்பாக்கம்: இந்த ஊரின் ஏரி இந்த ஜில்லாவிலுள்ள எல்லா ஏரிகளிலும் பெரியது. அதன் நீளம் 4 மைல். இந்த ஏரிக்குப் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. அத்தண்ணீர் பல கிராமங்களுக்குப் பாய்கிறது. இந்த ஏரியின் கோடியிலிருந்து கொரட்டலை யாறு என்னும் ஆறு உற்பத்தியாகிறது. இதுதான் நெமிலியின் ஓரமாக வருகிறது. அது இத்தாலுக்காவில் வடகிழக்காக ஓடி நகரி ஆற்றில் கலக்கிறது. இவ்விடத்தில் விவசாயம் நன்ருக நடக்கிறது. இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு.

வாலாஜாபேட்டை: இது அத்தாலுக்காவின் தலைநகர். இங்கு ஒரு ஹைஸ்கூல் நடைபெறுகின்றது. ஊர் பெரியதாகவும் தெருக்கள் விசாலமாகவும் உள்ளன. இது முற்காலத்தில் சிறந்த வியாபார ஸ்தலமாக இருந்தது. இப்பொழுது வேலூர் பெரிய வியாபார ஸ்தலமான பிறகு இதன் வியாபாரம் குறைந்துவிட்டது. இங்கு நெசவுத்தொழில் அதிகம். பட்டு வஸ்திரங்கள், கம்பளங்கள் நெய்யப்படுகின்றன.

இராணிப்பேட்டை: இது பாலாற்றின் வட கரையில் இருக்கிறது. இங்கு ஒரு போதனமுறைப் பாடசாலையும் பாரி கம்பனியாரின் தொழிற்சாலையும் இருக்கின்றன. அத் தொழிற்சாலையில் ஜாடிகள், திராவகங்கள், உரங்கள் முதலியன செய்கிறார்கள். அவை வெளியூர்களுக்குப் புகைவண்டி மூலம் அனுப்பப்படுகின்றன. தேசிங்குராஜன் மனைவி, கணவன் இறந்தபோது அவனுடன் உடன்கட்டை ஏறின தன் ஞாபகார்த்தமாக இந்த ஊர் ஏற்படுத்தப்பட்டது. அதனால்தான் இதன் பெயர் இராணிப்பேட்டை என்று



பாரி கம்பெனியாரின் தொழிற்சாலை

வழங்குகின்றது. பிரதி வெள்ளிக்கிழமையும் இங்கே ஒரு பெரிய சந்தை கூடுகின்றது. அப்பொழுது ஏராளமான மாடுகள் விற்பனைக்கு வருகின்றன.

ஆற்க்காடு: இது பாலாற்றின் தென்கரையில் வேலூரிலிருந்து 14 மைல் தூரத்தில் இருக்கிறது. இது முன்காலத்தில் கர்நாடக நவாபின் தலைநகராக இருந்தது.

க்ளைவ் என்னும் ஆங்கிலேய வீரர் இதை மஹமதியரிடமிருந்து 1751-ம் வருஷம் கைப்பற்றி ஆங்கிலேய அரசாட்சியை இந்தியாவில் ஸ்தாபித்தார். அக்காலத்தில் இருந்த கோட்டையின் சின்னங்கள் அங்கங்கே காணப்படுகின்றன. இங்குப் பல கோரிகளும் மசூதிகளும் இருக்கின்றன. இங்கு ஒரு ஹைஸ்கூலும், மஹமதியர் போதனைமுறைப் பாடசாலையும், மஹமதிய அனாதைப் பிள்ளைகளின் இலவச



'டெல்லிகேட்' என்னும் கோட்டை வாயில்

போஜனம், உடை முதலியன தரும் பாடசாலையும் இருக்கின்றன. இங்கு விசேஷ வியாபாரம் நடைபெறுகின்றது. முற்காலத்தில் கட்டப்பட்ட 'டெல்லிகேட்' என்னும் கோட்டை வாயிற்படி இப்பொழுதும் சர்க்காரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த ஊரைச்சுற்றித் தென்னை, மாந்தோப்புகள் பல இருக்கின்றன.

வேப்பூர் : ஆர்க்காட்டுக்கு மேற்கில் 2 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு வசிஷ்ட மகரிஷியின் கோயில் உண்டு.

விஷாரம் : இது வேலூரிலிருந்து ஆர்க்காட்டுக்குப் போகும் பாதையின் இருபுறங்களிலும் உள்ளது. இங்கு மஹமதியர்கள் விசேஷம். அவர்கள் ஒரு ஹைஸ்கூலை நடத்திவருகிறார்கள். இங்கு வெற்றிலை விசேஷமாகப் பயிராகிறது.

பஞ்சபாண்டவ மலை : இது ஆர்க்காட்டுக்குத் தென் மேற்கே 4 மைல் தூரத்தில் இருக்கிறது. இக் குன்றில் சித்திர வேலைகளும், குகையும், மண்டபமும் இருக்கின்றன.

திமிரி : இது ஆர்க்காட்டுக்குத் தெற்கில் 5 மைல் தூரத்தில் ஆரணிக்குப்போகும் பாதையின் இரு புறங்களிலும் இருக்கிறது. இங்கு இடிந்துபோன ஒரு கோட்டையின் அறிகுறிகள் இருக்கின்றன. இவ்வூரைச் சுற்றி விவசாயம் நன்கு நடைபெறுகின்றது.

கலவை : இது ஆர்க்காட்டுக்குத் தென்கிழக்கில் 13 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு விவசாயம் நன்றாக நடக்கிறது. வெற்றிலை விசேஷம்.

(2) செய்யாற்றுப் பிரதேசம் :

செய்யாறு, ஜவ்வாது மலைகளில் உற்பத்தியாகி, மேட்டுப் பிரதேசத்திலுள்ள செங்கம், போளூர் தாலுக்காக்களில் பாய்ந்து, பிறகு சமவெளிப் பிரதேசமாகிய ஆரணி, வந்தவாசி, செய்யாறு தாலுக்காக்களில் பாய்ந்து, செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றில் கலக்கிறது. எனவே இது பாலாற்றின் உபநதியாகும்.

ஜவ்வாது மலைகளில் மழைக்காலத்தில் அதிக மழை பெய்வதனால் இவ்வாற்றில் அப்பொழுது நல்ல வெள்ளம் வரும். இவ்வாற்றிலும் அணைகளைக் கட்டித் தண்ணீரை

ஏரிகளுக்குத் திருப்பிப் பயிர்களுக்கு உபயோகிக்கிறார்கள். இப்படிப்பட்ட அணைக்கட்டுகளில் முக்கியமானது வந்தவாசி தாலுக்காவில் ஆவணியாவரம் என்னும் இடத்தில் உள்ளது. மற்றக்காலங்களில் ஆற்றில் வெள்ளம் இராது. அக்காலங்களில் ஊற்றுக்கால்களைத் தோண்டிப் பயிர்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

செய்யாற்றில் பல உபநதிகள் கலக்கின்றன. அவற்றில் முக்கியமானது கமண்டலநாக நதி. இது கமண்டல நதி, நாக நதி என்னும் இரண்டு சிற்றாறுகள் சேர்ந்து இப்பெயர் அடைகிறது. இந்நதி வாழைப்பந்தலுக்குச் சமீபத்தில் செய்யாற்றில் கலக்கிறது. இதுவும் ஜவ்வாது மலைகளில் உற்பத்தியாவதால் இதிலும் மழைக்காலத்தில் நல்ல வெள்ளம் வரும். அதை ஏரிகளுக்குத் திருப்பிப் பயிர்களுக்கு உபயோகித்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பிரதேசத்தில் பூமி மிகவும் செழிப்பாக இருக்கிறது. ஏனென்றால் மழைத்தண்ணீர் வண்டல் மண்ணை அடித்து வருகிறது. அது வயல்களுக்குப் பாயும்போது வண்டல் மண் வயல்களில் படிந்து நிலத்தைச் செழிப்பாக்குகின்றது. இப்பிரதேசத்திலும் தண்ணீர் அதிகம் தேவையான பயிர்களான நெல், கரும்பு, வெற்றிலை, தென்னை விசேஷமாகப் பயிராகின்றன. எள்ளும் விசேஷமாகப் பயிராகின்றது. ஆற்றங்கரையில் சவுக்கு பயிர் செய்யப்படுகின்றது.

இப்பிரதேசத்திலும் முக்கிய தொழில் பயிர்த்தொழிலே. சிலவிடங்களில் நெசவுத்தொழிலும் நடைபெறுகின்றது.

முக்கிய ஊர்கள் :

திருவண்ணாமலை : இத்தாலுக்காவின் தலைநகர். ஒரு குன்றின் அடிவாரத்தில் இருக்கிறது. இது ஒரு சிவஸ்

தலம். இங்கு அருணாசல ஈஸ்வரர் கோவில் இருக்கிறது. கார்த்திகை மாதம் கார்த்திகை யன்று மலையின்மேல் பெரிய தீபம் வைக்கிறார்கள். அதைத் தரிசிக்க யாத்ரீகர்கள் ஏராளமாக வருகிறார்கள். அக்காலத்தில் இங்கு ஒரு பெரிய மாட்டுச் சந்தை கூடுகின்றது.

வேட்டவலம் : இது திருவண்ணாமலை - திருக்கோயிலூர் பாதையின் ஓரத்தில் திருவண்ணாமலைக்குத் தெற்கில் இருக்கிறது. இது ஒரு ஜமீனின் தலைநகரம்.



திருவண்ணாமலை கோயில்

தண்டரை : திருவண்ணாமலைக்குத் தெற்கில் திருவண்ணாமலை - விழுப்புரம் இருப்புப் பாதையிலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷன். இதைச் சுற்றிப் பல பெரிய கிராமங்கள் இருக்கின்றன.

கீழ்ப் பேன்னாத்தூர் : இது திருவண்ணுமலைக்குக் கிழக்கில் எல்லைப்புறத்தில் திருவண்ணுமலை - செஞ்சி பாதையின் ஓரத்தில் இருக்கிறது.

மங்கலம் : இது திருவண்ணுமலைக்கு வடகிழக்கில் ஒரு பாதையின் ஓரத்தில் இருக்கிறது.

கலசபாக்கம் : இது திருவண்ணுமலைக்கு வடக்கில் எல்லைப்புறத்தில் உள்ளது. போளூர் தாலுக்காவைச் சேர்ந்தது. செய்யாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு ஒரு புராதன சிவாலயம் இருக்கிறது. இவ்வூரில் விவசாயம் நன்ருக நடைபெறுகின்றது.

போளூர் : இது இத்தாலுக்காவின் தலைநகர்; ஒரு ரயில்வே ஸ்டேஷன்; வேலூர் - திருவண்ணுமலை பாதையின் ஓரத்தில் இருக்கிறது. செய்யாற்றின் வடகரையில் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த ஊருக்கு மேற்கேயுள்ள சம்பத்கிரிமலைக்கும் ஹோசூர் மலைக்கும் மத்தியில் இவ்வூர் ஏரி கட்டப்பட்டிருக்கிறது. ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் மஞ்சளாறு இந்த ஏரியில் விழுகிறது. சம்பத்கிரியின்மேல் ஒரு கோயில் இருக்கிறது. இவ்வூருக் கருகில் ஒரு பாழடைந்த கோட்டையின் சின்னங்கள் இருக்கின்றன. இவ்வூரைச் சுற்றியுள்ள காடுகளில் கிடைக்கும் மூங்கில் முதலிய பொருள்கள் இங்கு ஏற்றுமதியாகி வருகின்றன. இவ்வூரில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

மண்டகுளத்தூர் : இது போளூருக்குக் கிழக்கில் இருக்கிறது. இங்குப் பிராமணர்கள் அதிகம்.

சேத்துப்பட்டு : இது போளூருக்குத் தென்கிழக்கில் இத்தாலுக்காவின் எல்லைப்புறத்தில் இருக்கிறது. இங்கு வந்தவாசி, ஆரணி, செஞ்சி, போளூர் ஆகிய இடங்களுக்குப் போகும் பாதைகள் கூடுகின்றன. இது முற்காலத்தில்

மஹமதியர்களுடைய ராணுவ ஸ்தலமாக இருந்தது. ஒரு பழைய கோட்டையின் சின்னங்கள் காணப்படுகின்றன. இங்கு நல்ல ஜோடுகள் தைக்கப்படுகின்றன.

திருமலை: மண்டகுளத்தூருக்கு வடக்கில் செய்யாற்றின் கரையில் இருக்கிறது. இதன் சமீபத்தில் ஒரு குன்றில் குகைகள் வெட்டப்பட் டிருக்கின்றன; அவற்றில் நல்ல சித்திர வேலைகள் காணப்படுகின்றன.

களம்பூர்: இது ஆரணிரோட் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிறது. விசேஷமான நெசவுத்தொழில் நடக்கிறது. இவ்வூருக்கு ஒரு பெரிய ஏரி இருக்கிறது.

ஆரணி: இது ஒரு ஜாகீர். கமண்டல நதியின் தென் கரையில் இருக்கிறது. இங்குப் புராதனமான கோட்டை ஒன்று இருக்கிறது. இது முன்காலத்தில் ஒரு ராணுவ ஸ்தலமாக இருந்தது. இங்குப் பட்டு பருத்தி நெசவு அதிகம். இவ்வூரைச் சுற்றி நெல் விசேஷமாகப் பயிராவதால் இங்கு நெல்வியாபாரம் அதிகம். இவ்விடத்தில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

சத்தியவிஜயநகரம்: ஆரணிக்குக் கிழக்கில் 1½ மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு மாத்வ பிராமணர்களுடைய குருவான சத்தியவிஜய சுவாமி என்பவரை அடக்கம் செய்திருக்கிறார்கள். அதனால்தான் இப்பெயர் இவ்வூருக்கு உண்டாயிற்று. ஆரணி ஜாகீர்தாரருடைய இரண்டு அரண்மனைகள் இங்கே இருக்கின்றன.

தேவிகாபுரம்: இது சேத்துப்பட்டு - போளூர் பாதையின் ஓரத்தில் இருக்கிறது. இங்கு பிரகதாம்பாளின் கோவில் ஊரிலும், கனககிரீசுவரரின் கோவில் சமீபத்திலுள்ள குன்றின் மேலும் இருக்கின்றன. இவை பிரசித்திப் பெற்றவை.

குண்ணத்தூர் : ஆரணிக்கு வடமேற்கில் 5 மைல் தூரத்தில் ஆரணி - வேலூர் பாதையின் பக்கத்தில் இருக்கிறது. இங்கு மஹமதியர்கள் விசேஷம். அவர்கள் நல்ல கோரைப் பாய்களை நெய்கிறார்கள். இது அனேக வருஷங்களுக்கு முன் ஒரு ராஜுவஸ்தலமாக இருந்தது. இவ்வூருக்குச் சமீபத்தில் ஐரோப்பியப் படைவீரர்களின் சமாதி இருக்கிறது.

வாழைப்பந்தல்: செய்யாற்றுப் பிரதேசத்திலுள்ள வாலாஜா தாலுக்காவைச் சேர்ந்த கிராமம். இங்கு மன்னார் சாமி கோயில் ஒன்று இருக்கிறது. அங்கு அனேகர் பிரார்த்தனைகள் செலுத்துகிறார்கள்.

மாம்பாக்கம்: இந்தப் பிராமணர்கள் அதிகம். ஆரணியிலிருந்து திருவத்திபுரத்துக்குப் போகும் பாதை இதன் அருகில் போகிறது.

திருவத்திபுரம் : இது ஆரணிக்குக் கிழக்கில் செய்யாற்றின் வடகரையிலிருக்கிறது. ஒரு சிவஸ்தலம். இங்குள்ள சுவாமிக்கு வேதபுரீஸ்வரர் என்று பெயர். இங்கு நல்ல பட்டுச் சேலைகளை நெய்கிறார்கள். இங்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கிருந்து ஆர்க்காடு, காஞ்சீபுரம், வந்தவாசிக்குப் பாதைகள் போகின்றன.

அனக்காவூர் : திருவத்தூருக்கு எதிரில் செய்யாற்றின் தென் கரையில் இருக்கிறது. இங்கு ஆஞ்சநேயர் கோயில் ஒன்று இருக்கிறது.

மாமண்டூர் : இது திருவத்திபுரத்துக்கு வடகிழக்கில் திருவததிபுரம்-காஞ்சீபுரம் பாதையின் ஓரத்தில் இருக்கிறது. இந்த ஜில்லாவிலுள்ள இரண்டாவது பெரிய ஏரி இங்கு இருக்கிறது. அதன் கரை சிறு குன்றுகளை இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. ஏரியின் தென்கோடியில் உள்ள குன்றில் குகைகளும் கல்வெட்டுகளும் இருக்கின்றன.

தூசி: இது மாமண்டூருக்கு வடக்கில், மாமண்டூர் ஏரியின் வடகோடியில் பாதையின் ஓரத்தில் இந்த ஜில்லாவின் கிழக்கு எல்லைப்புறத்தில் இருக்கிறது.

வந்தவாசி: இது அத்தாலுக்காவின் தலைநகர். திருவத்திபுரத்துக்குத் தென்கிழக்கில் இருக்கிறது. இங்குப் பழைய கோட்டை ஒன்றும் சிவாலயமும் இருக்கின்றன. அருகிலுள்ள தவளகிரி என்னும் மலையின் மேலும் ஒரு கோயில் இருக்கிறது. ஊருக்குத் தெற்கில் சுகுந்தநதி என்னும் சிற்றாறு ஓடுகிறது. இங்கு நேர்த்தியான கோரைப் பாய்களை நெய்கிறார்கள். இதற்கு வேண்டிய கோரையை நன்செய் நிலங்களில் பயிர் செய்கிறார்கள். அது போதாமையால் வெளியிலிருந்தும் இறக்குமதி செய்கிறார்கள். இங்குக் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திண்டிவனம், சேத்துப்பட்டு, ஆரணி, திருவத்திபுரம் ஆகிய இடங்களுக்குப் போகும் பாதைகள் கூடுகின்றன. இவ்விதம் பல பாதைகள் கூடுவதனால் இங்கு நல்ல வியாபாரம் நடைபெறுகின்றது.

பொணமல்லூர்: இது ஒரு பெரிய கிராமம்; இங்கு ஜைநர்கள் விசேஷம். அவர்களுடைய கோவிலும் உண்டு. இங்கு விவசாயம் நன்கு நடைபெறுகின்றது.

தேசூர்: இது வந்தவாசிக்குத் தென்மேற்கில் இருக்கிறது. இங்கு நெசவுத்தொழில் விசேஷம். தோல் பதனிடுதலும் நடைபெறுகிறது.

சீயமங்கலம்: தேசூருக்கு மேற்கில் இருக்கிறது. இங்கு ஒரே பாறையில் ஆலயம், மண்டபம், லிங்கம், துவாரபாலகர்கள் முதலியன எல்லாம் வெட்டப்பட்டு இருக்கின்றன.

தெள்ளாறு: இது வந்தவாசிக்குத் தெற்கில் வந்தவாசி - திண்டிவனம் பாதையின் ஓரத்தில் இருக்கிறது. இங்கு ஒரு பழைய கோட்டையும் கோவிலும் இருக்கின்றன.

5. மேட்டுப் பிரதேசம்

மேட்டுப்பிரதேசத்தில், குடியாத்தம் தாலுக்காவின் வடமேற்குப் பாகம், வேலூர் தாலுக்காவின் தென் பாகம், போளூர் தாலுக்காவின் வடமேற்குப் பாகம். திருப்பத்தூர் தாலுக்கா, செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலைத் தாலுக்கா வின் மேல்பாகம் அடங்கியிருக்கின்றன. இவற்றில் அங் கங்கே மலைகளும் இருக்கின்றன.

வங்காளக் குடாக்கடலில் இருந்து அடிக்கும் நீராவிக் காற்று செங்கற்பட்டு ஜில்லாவில் நல்ல மழையைக் கொடுத் துப் பிறகு நம் ஜில்லாவின் சமவெளிப் பிரதேசத்தில் சுமா ரான மழை தருகிறது. இதற்குள் காற்றிலுள்ள விசேஷ மான நீராவி மழையாகப் பெய்துவிடுவதால் அக்காற்று மேற்கிலுள்ள மேட்டுப் பிரதேசத்தில் வீசும்பொழுது மட்டான மழையைத் தருகிறது. அதேமாதிரி மேற்கே யுள்ள அரபிக்கடலிலிருந்து வீசும் நீராவிக் காற்றும் மேற்கு ஜில்லாக்களில் உள்ள மலைகளால் தடுக்கப்பட்டு விடுகிறது. அதனால் அங்கே விசேஷமான மழை பெய்கிறது மீதியான நீராவிக்காற்று, அம்மலைகளைத் தாண்டிவந்து நம் ஜில்லா வில் கொஞ்ச மழை தருகிறது. எனவே எந்தக்காற்றினாலும் மேட்டுப் பிரதேசத்தில் அதிக மழை இல்லை. கிழக்குச் சம வெளியில் பெய்வதைவிட இப்பிரதேசத்தில் குறைவான மழை பெய்கிறது. அதுவும் மலைகளையடுத்துள்ள பிரதேசத் தில் சற்று அதிகம் இருக்கும்; மற்றப் பாகங்களில் அதை விடக் குறைவாக இருக்கும்.

மழைக்காலத்தில் மலைகளின் மீது பெய்யும் மழை காட்டாறுகளின் வழியாக வெள்ளப்பெருக்கு எடுத்து ஓடும். அப்பொழுது இப்பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் அந்தத் தண்ணீரை ஏரிகளில் தேக்கி வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறார்கள்.

இப்பிரதேசத்தில் பெரிய ஆறுகள் இல்லாததனுல் நீர்ப்பாசன வசதி மிகவும் குறைவு. பூமியும் கற்பாங்கான தாகையால் இப்பிரதேசத்தில் விசேஷமான இறைகிணறு களும் இல்லை. எனவே ஏரிகளின் கீழும் இறைகிணறுகளைச் சுற்றியும் மட்டும் நெல் பயிர் செய்யப்படுகின்றது. மற்ற விடங்களில் அப்போதைக்கப்போது பெய்யும் மழையினுல் வளரும் பயிர்களான புன்செய்ப் பயிர்கள் பயிர் செய்யப்படு கின்றன. கம்பு, சோளம், கேழ்வரகு, துவரை, உளுந்து, வேர்க்கடலை முதலியன விசேஷமாகப் பயிராகின்றன. இப் பிரதேசத்தில் புளிய மரங்களும் நன்ருக வளருகின்றன. எனவே புளியும் வேர்க்கடலையும் இங்கிருந்து ஏற்றுமதியா கின்றன. திருப்பத்தூர் தாலுக்காவில் துவரை ஏராளமாய் விளைவதால் அது அங்கிருந்து வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகிறது. குடியாத்தம், செங்கம, திருவண்ணு மலை தாலுக்காக்களில் புகையிலையும் பயிர் செய்யப்பட்டு வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகிறது. திருவண்ணு மலை தாலுக்காவிலிருந்து மிளகாயும் அனுப்பப்படுகிறது.

இப் பிரதேசத்தில் பழவகைகளும் பயிராகின்றன. வேலூர், திருப்பத்தூர், குடியாத்தம் தாலுக்காககளில் ஒட்டு மாந் தோப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் கிடைக்கும் பழங்கள் சென்னை, பம்பாய் முதலிய நகரங் களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குடியாத்தம், ஆம் பூரை அடுத்துள்ள மேட்டுப் பிரதேசங்களில் எலுமிச்சம் பழமும், ஆம்பூர் சாத்துக்குடியை அடுத்துள்ள பிரதேசங் களில் சீனாப்பழங்களும் பயிராகின்றன. திருப்பத்தூர் தாலுக்காவில் திராட்சை பயிராகின்றது.

முக்கிய ஊர்கள் :

ஒடுக்கத்தூர்: இது வேலூருக்குத் தென்மேற்கில் 24 மைல் தூரததில் இருக்கிறது. பிரதி வெள்ளிக் கிழமையும்

இங்கு ஒரு சந்தை கூடுகின்றது. இவ்வூரின் சுற்றுப் புறங்களில் பல ஊர்கள் இருக்கின்றன. அவற்றிற்குப் பாளையங்கள் என்று பெயர். அவற்றில் தெலுங்கு பாஷை பேசும் ஒரு ஜாதியார் வசிக்கின்றனர். அவர்கள் முன் காலத்து விஜயநகர இராஜாக்களின் வமிசத்தைச் சேர்ந்தவர்களாம். அவர்கள் நல்ல விவசாயிகள். ஆசனும்பட்டு, மேல் அரசம்பட்டு என்பவை ஒடுகத்தூருக்குத் தெற்கிலுள்ள ஊர்கள்; நாய்க்கனேரி மேற்கில் உள்ளது. இப்பிரதேசத்தில் குளிர் ஜுரம் வருவதால் வசிப்பதற்கு தகுதி யற்றது.

படவேடு: இது கமண்டல நதியின் கரையில் இருக்கிறது. 'படை வீடு' என்பது படவேடு என்று மருவிற்று. முன் காலத்தில் குறும்ப அரசர்களின் தலைநகராக இருந்தது. இப்பொழுது ஒரு சிறிய கிராமமாக இருக்கிறது. பூமியைத் தோண்டினால் அக்காலத்துச் சின்னங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ரேணுகாம்பாள் ஆலயம் பிரசித்தி பெற்றது. ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் விசேஷமான ஜனங்கள் இங்குப் பிரார்த்தனை செலுத்த வருகிறார்கள்.

சந்தவாசல்: வேலூர் - போளூர் பாதைக்கு அருகிலிருக்கிறது; முன்காலத்தில் இது படைவீட்டின் ஒரு பாகமாம்.

கர்நாடிகர்: இது சந்தவாசலுக்குத் தென்மேற்கில் இருக்கிறது. இதற்கு அருகில் ஒரு மலையின்மேல் ஒரு பலமான கோட்டை கட்டப்பட்டு இருக்கிறது.

நக்ஷத்திரக்கோவில்: இது போளூருக்குத் தெற்கில் இருக்கும் ஒரு குன்றின்மேல் கட்டப்பட்ட சுப்பிரமணிய ஸ்தலம். இவ்விடத்திற்குப் பிரதி கிருத்திகையும் யாத்ரீகர்கள் வருகிறார்கள். இது போளூர் - கடலாடி பாதையின் ஓரத்தில் இருக்கிறது.

கடலாடி: இது மலைகளால் சூழப்பட்டுள்ளது. போளூர் தாலுக்காவின் தென் எல்லைப்புறத்தில் இருக்கிறது.

இங்கு நெசவுத்தொழில் நடக்கிறது. இங்கு ஒரு தேவாலயம் இருக்கிறது. இதன் பக்கத்தில் ஒரு சிற்ருறு பாய்கிறது.

காஞ்சி: இது கடலாடிக்குத் தெற்கில் இருக்கிறது. இவ்வூரில் சிறந்த ஆலயம் ஒன்று இருக்கிறது. இங்கும் நெசவுத்தொழில் நடக்கிறது.

தண்டராம்பட்டு: திருவண்ணுமலையிலிருந்து இவ்விடத்துக்கு ஒரு பாதை வருகின்றது. இதன் பக்கத்தில் அலியாறு என்னும் சிற்ருறு ஓடுகிறது. இப்பிரதேசத்தில் விசேஷமான மிளகாய் பயிர் செய்து வெளி தாலுக்காக்களுக்கு அனுப்புகிருர்கள். ஆட்டுரோமத்தால் கம்பளங்கள் நெய்கிருர்கள்.

செங்கம்: இது இத்தாலுக்காவின் தலைநகர். செய்யாற்றின் கரையில் திருவண்ணுமலைக்கு வடமேற்கில் இருக்கிறது. இதற்குச் சமீபத்தில் ஜவ்வாது மலைகளைக் கடக்கும் கணவாய் இருக்கிறது. அதன் பெயர் செங்கம்ம கணவாய். இவ்விடத்தில் ஜவ்வாது மலைகளில் விளையும் பொருள்கள் விலை சரசமாய்க் கிடைக்கும். இங்கிருந்து திருவண்ணுமலைக்கும் திருப்பத்துருக்கும் பாதைகள் போகின்றன.

ராவந்தவாடி: இந்தக் கிராமத்தின் சுற்றுப் புறங்களில் நல்ல புகையிலை பயிர் செய்கிருர்கள்.

புதுப்பாளையம்: இவ்விடத்தில் பிரதிவாரமும் சந்தை கூடுகின்றது. ஆட்டு ரோமத்தால் கம்பளங்கள் நெய்கிருர்கள்.

துக்காபேட்டை: செங்கத்துக்கு ஒரு மைல் தூரத்தில் தென்கிழக்கில் இருக்கிறது. இங்கு வாரச்சந்தை ஒன்று கூடுகின்றது. பாச்சல், கோட்டைக்குளம் என்பவைதிருவண்ணுமலை-செங்கம் பாதையின் ஓரத்தில் உள்ள ஊர்கள். கோட்டைக்குளத்தில் ஒரு தேவாலயம் இருக்கிறது.


வட ஆற்காடு ஜில்லா
தாலுக்காக்களும் ரஸ்தாக்களும்
குறிப்பு
M.S.M.R.
S.I.Ry
ரெயில்பாதை

விஷமங்கலம் : சிங்காரப்பேட்டை —(சேலம் ஜில்லா) திருப்பத்தூர் பாதையின்மேல் இருக்கிறது. இங்கு ஒரு கிராமாந்தர ஆஸ்பத்திரி இருக்கிறது.

காகங்கரை : இது ஜில்லாவின் மேற்கு எல்லைப்புறத்திலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

திருப்பத்தூர் : இது இத்தாலுக்காவின் தலைநகர். ஒரு ரயில்வே ஜங்ஷன். கிருஷ்ணகிரி (சேலம் ஜில்லா) பெங்களூர், ஜோலார்பேட்டை ஆகிய இடங்களுக்குப் போகும் பாதைகள் இங்கே கூடுகின்றன. இவ்விடத்திலிருந்து துவரை, புளி, வெல்லம், காட்டுச் சரக்குகள் ஏற்றுமதியாகின்றன. இவ்வூருக்கருகில் பாதிரிமார் ஒரு பெரிய ஆஸ்பத்திரி நடத்துகிறார்கள். இவ்வூரில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கிருந்து சேலம் ஜில்லாவைச் சேர்ந்த கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தங்கரை, சிங்காரப்பேட்டை ஆகிய ஊர்களுக்கும் நம் ஜில்லாவிலுள்ள நாட்டரம்பள்ளி, வாணியம்பாடி, ஆலங்காயம் முதலிய இடங்களுக்கும் பாதைகள் போகின்றன. இத்தனைப் பாதைகள் இங்குக் கூடுவதால் இங்கு விசேஷ வியாபாரம் நடக்கிறது.

கந்தலி : திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி பாதையின் ஓரத்தில் மேற்கு எல்லைப்புறத்தில் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு வாரச் சந்தை கூடுகின்றது. இதுவும் இதைச் சுற்றியுமுள்ள ஊர்களும் மிட்டா (ஜமீன்) கிராமங்கள்.

ஜோலார்பேட்டை : இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து சென்னைக்கும் பெங்களூருக்கும் கிருஷ்ணகிரிக்கும் இருப்புப்பாதைகள் போகின்றன. இது திருப்பத்தூர் - வாணியம்பாடி பாதையின் பக்கத்தில் இருக்கிறது. இங்கிருந்து நாட்டரம்பள்ளிக்கு ஒரு பாதை போகிறது.

ஏலகிரி: ஜோலார்பேட்டைக்குச் சமீபத்தில் தென்கிழக்கில் உள்ள ஒரு சிறிய ஜமீன்.

நாட்டரம்பள்ளி: ஜோலார்பேட்டைக்கு வடமேற்கிலுள்ள ஒரு பெரிய கிராமம்.

அலங்காயம்: இது திருப்பத்தூருக்கு வடகிழக்கில் இருக்கிறது. இவ்விடத்துக்குத் திருப்பத்தூரிலிருந்தும் வாணியம்பாடியிலிருந்தும் பாதைகள் வருகின்றன. இது ஜவ்வாது மலைகளுக்கு அருகிலிருக்கிறது. காடுகளில் விளையும் பொருள்கள் இங்கே விற்பனைக்கு வருகின்றன.

6. மலைப் பிரதேசம்

மலைகள் உள்ள இடங்களில் எல்லாம் காடுகள் இருக்கின்றன. மலைகள் மேட்டுப் பிரதேசத்தில் இருக்கின்றன. எனவே மலைகளின் மேலும் அவற்றைச் சார்ந்த மேட்டுப் பிரதேசத்திலும் காடுகள் இருக்கின்றன. அவற்றில் சந்தனம், தேக்கு, கருங்காலி முதலிய விலையுயர்ந்த மரங்களும் பயிராகின்றன; சிறுத்தை, மான், நரி, முயல், குரங்கு முதலிய மிருகங்களும் இருக்கின்றன. இப்பிரதேசத்தில் விஷஜுரம் வருவதால் வசிப்பதற்குத் தகுதியற்றது.

இங்கு மலையாளிகள் என்னும் ஜாதியார் மட்டும் வாழ்கின்றனர். அவர்கள் காடுகளில் மூங்கில், மரம் முதலியவை வெட்டியும் அங்கே கிடைக்கும் கடுக்காய், எட்டிக்கொட்டை, ஆவாரம் பட்டை, தேன்மெழுகு, சீயக்காய், பூவந்திக் கொட்டை, புளி முதலிய காட்டுப் பொருள்களைச் சர்க்காரிடம் பணம் கட்டி ஏலம் எடுத்தவர்களுக்காகச் சேகரித்தும் ஜீவிக்கிறார்கள். அவர்களிடம் இப் பொருள்களைக் கொடுத்துவிட்டுத் தங்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, துணி முத

லியன வாங்கிக் கொள்வார்கள். இவர்கள் காடுகளிலேயே வரகு, சாமை, கடுகு, மலைவாழை, பலாப்பழம் முதலியன பயிர் செய்தும் ஜீவிக்கிறார்கள்.

இவர்கள் தங்கள் பொருள்களை விற்கவும் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கவும் காடுகளின் ஓரத்தில் பல விடங்களில் சந்தைகள் கூடுகின்றன. வேலூர் தாலுக்காவில் ஒடுகத்தூரிலும், போளூர் தாலுக்காவில் மூலக்காட்டிலும், செங்கம் தாலுக்காவில் துக்காப்பேட்டையிலும், திருப்பத்தூர் தாலுக்காவில் ஆலங்காயத்திலும் இவர்கள் இவ்விதம் வியாபாரம் செய்கிறார்கள்.

காடுகளில் நல்ல புல் கிடைப்பதால் காடுகளைச் சுற்றியுள்ள ஊர்களில் ஆடு மாடுகளை வளர்க்கிறார்கள். அதனால் அவற்றின் தோலைப் பதனிடும் தொழிற்சாலைகளும் இப்பிரதேசத்தை அடுத்துள்ள ஊர்களில் இருக்கின்றன. ஆம்பூர், வாணியம்பாடி, பேரணம்பட்டு முதலிய இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் விசேஷம். பதனிட்ட தோல் வெளி ஜில்லாக்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ரோமத்துக்காக ரோமம் அடர்ந்த குரும்பாடுகளை வளர்த்து அவற்றின் ரோமத்தால் கம்பளங்களும் நெய்கிறார்கள். திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள மோட்டூரும், செங்கம் தாலுக்காவிலுள்ள புதுப்பாளையமும், போளூர் தாலுக்காவிலுள்ள ஆத்வாம்பாடியும் உதாரணங்களாகும்.

இம் மலைப்பிரதேசத்தில் போக்குவரவுக்கு வேண்டிய பாதைகள் மிகவும் குறைவு.

7. நம் ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம்

(1) பாதை வழி :

நாம் நம் ஜில்லாவில் பிரயாணம் செய்ய முக்கியமான வழிகளை அறிவோம். சென்னையிலிருந்து வரும் பாதை வழியாகப் போனால் காவேரிப்பாக்கம், வாலாஜா, இராணிப் பேட்டை, ஆர்க்காடு, விஷாரம், வேலூர், விரிஞ்சிபுரம், பள்ளிக்கொண்டை, ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் பார்த்துக்கொண்டு சேலம் ஜில்லாவில் நுழைவோம்.

வேலூரிலிருந்து தெற்கே வரும் பாதையின் வழியாக வந்தால் கணியம்பாடி, கண்ணமங்கலம், போளூர், திருவண்ணமலை பார்த்துக்கொண்டு தென் ஆர்க்காடு ஜில்லாவில் நுழைவோம். திருவண்ணமலையில் இருந்து மேற்கே போனால் செங்கம் பார்த்துக்கொண்டு சேலம் ஜில்லாவில் மற்றொரு வழியாக நுழைவோம்.

வேலூரிலிருந்து தெற்கே வரும் பாதையில் கண்ணமங்கலத்தில் பிரிந்து தென்கிழக்கே போகும் பாதையின் வழியாகப் போனால் ஆரணி, வந்தவாசி பார்த்துக்கொண்டு செங்கல்பட்டு ஜில்லாவில் நுழைவோம். வந்தவாசியிலிருந்து வடமேற்கே போனால் திருவத்திபுரம், ஆர்க்காடு, இராணிப்பேட்டை பார்த்துக்கொண்டு திருவலம் வழியாகச் சித்தூர் ஜில்லாவில் நுழைவோம்.

இராணிப்பேட்டையி லிருந்து மேற்கே போகும் வழியாகப் போனால், காட்பாடி, குடியாத்தம், பேரணம்பட்டு வழியாகச் சித்தூர் ஜில்லாவில் வேறொரு இடத்தில் நுழைவோம். வடக்கே போகும் வழியாகப் போனால், சோளிங்கபுரம் போவோம். சோளிங்கபுரத்தி லிருந்து மேற்கே போனால் பொன்னை வழியாகச் சித்தூருக்குப் போவோம். வடகிழக்கே போனால் அரக்கோணம் போவோம். அரக்

கோணத்திலிருந்து தென்மேற்கே வந்தால் நெமிலி, பனப்பாக்கம் வழியாக சென்னை - வேலூர் பாதையில் வந்து கலப்போம்.

குடியாத்தத்தி லிருந்து வடக்கே போனால் சித்தூர் ஜில்லாவிற்குப் போவோம். தெற்கே போனால் வேலூர் திருப்பத்தூர் பாதையில் பள்ளிக்கொண்டையில் கலப்போம். பேரணம்பட்டி லிருந்து தெற்கே போனால் ஆம்பூருக்குப் போவோம். இவை தவிர ஆங்காங்கே சிறு பாதைகளும் இருக்கின்றன. எனவே நம் ஜில்லாவில் மேட்டுப் பிரதேசம் தவிர மீதிப் பாகங்களில் போதுமான பாதைகள் இருக்கின்றன. இவற்றில் எல்லாம் பிரயாணி மோட்டார் வண்டிகள் (பஸ்கள்) ஓடுகின்றன.

(2) ரயில் வழி :

சென்னையிலிருந்து வரும் புகைவண்டியின் வழியாகச் சென்றால் அரக்கோணம், வாலாஜா ரோட், காட்பாடி, குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, பார்த்துக்கொண்டு பெங்களூருக்குப் போவோம். அரக்கோணத்தி லிருந்து தெற்கே போகும் புகைவண்டியில் போனால் காஞ்சிபுரம் போவோம்: வடக்கே போனால் சித்தூர் ஜில்லாவில் நுழைவோம். வாலாஜா ரோட்டி லிருந்து தென்மேற்கே போகும் பாதையின் வழியாகச் சென்றால் இராணிப்பேட்டைக்குப் போவோம். காட்பாடியி லிருந்து தெற்கேவரும் புகை வண்டியில் போனால் போளூர், திருவண்ணாமலை பார்த்துக்கொண்டு தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள விழுப்புரத்துக்குப் போவோம்; வடகிழக்கே போகும் புகை வண்டியில் போனால் சித்தூர் ஜில்லாவிலுள்ள பாகாலாவுக்குப் போவோம். ஜோலார்பேட்டையி லிருந்து தெற்கே போகும் பாதையின் மூலம் போனால் திருப்

பத்தூர் பார்த்துக்கொண்டு சேலம் ஜில்லாவிலுள்ள கிருஷ்ணகிரிக்குப் போவோம்.

எனவே நம் ஜில்லாவில் அரக்கோணம், வாலாஜா ரோட், காட்பாடி, ஜோலார்பேட்டை இருப்புப்பாதை சந்திப்புகளாகும்.

8. நம் ஜில்லாவை ஒருங்கே பார்த்தல்

எல்லைகள் : நம் ஜில்லாவின் மேற்கில் சேலம் ஜில்லாவும், வடக்கே சித்தூர் ஜில்லாவும், கிழக்கே செங்கற்பட்டு ஜில்லாவும், தெற்கே தென் ஆர்க்காடு ஜில்லாவும் இருக்கின்றன.

இயற்கை அமைப்பு : வடமேற்குப் பாகம் மேட்டுப் பிரதேசம். இதன் வடபாகத்தில், குடியாத்தம் தாலூக்காவின் தென் பாகத்தில், விசாலமான வாணியம்பாடி பள்ளத்தாக்கு இருக்கிறது. மீதிப்பாகம் முழுவதும் சமவெளிப் பிரதேசம். மேட்டுப் பிரதேசத்தில் மலைகள் அடர்ந்திருக்கின்றன. அவற்றில் திருப்பத்தூர், வேலூர், போளூர், தாலுக்காக்களில் படர்ந்திருக்கும் மலைக்கூட்டத்துக்கு ஜவ்வாது மலைகள் என்று பெயர். அவற்றில் திருப்பத்தூரில் **சுவாமி மலையும்**, போளூர் தாலுக்காவில் **கர்னுடிகரும்** வேலூர் தாலுக்காவில் **கைலாசகிரியும்** முக்கியமான சிகரங்களாகும்.

ஆறுகள் : மேட்டுப் பிரதேசத்தின் வடபாகத்தில் பாலாறு பாய்ந்து சமவெளிப் பிரதேசத்தை அடைந்து தென்கிழக்காகப் பாய்கிறது. தென் பாகத்தில் செய்யாறு பாய்ந்து சமவெளியில் வடகிழக்காய்ப் பாய்கிறது. இது நம் ஜில்லாவின் கிழக்கில் செங்கற்பட்டு ஜில்லாவில் வாலாஜாபாத் என்னுமிடத்தில் பாலாற்றில் கலக்கின்றது.

கைத்தொழில்கள், விளைபொருள்கள் : சமவெளிப் பிரதேசத்தில் விவசாயம் முக்கியத் தொழில். துணி நெய்தலும் நடைபெறுகின்றது. மேட்டுப் பிரதேசத்தில் விவசாயத்துடன் ஆடு மாடு மேய்த்தலும் நடைபெறுகின்றது. கம்பளம் நெய்தல், பாய்முடைதல், வெல்லம் காய்ச்சுதல் அங்கங்கே நடைபெறுகின்றன.

ஜல வசதியுள்ள விடங்களில் நெல், கரும்பு, புகையிலை பயிராகின்றன. ஜல வசதியற்ற விடங்களில் கடலைக்காயும் புன்செய்த் தானியங்களும் பயிராகின்றன.

போக்குவரவு சாதனங்கள் : மேட்டுப் பிரதேசம் தவிர மற்றப் பாகங்களில் போதுமான பாதைகள் இருக்கின்றன. அவற்றில் சென்னையிலிருந்து பெங்களூர் போகும் பாதையும், சித்தூரிலிருந்து கடலூர் போகும் பாதையும் முக்கியமானவை; மற்றவை கிளைப் பாதைகள்.

இவற்றிற்கெல்லாம் வேலூர் மத்திய ஸ்தானமாகும். பிரதி தாலுக்காவின் தலைநகரிலும் பல கிளைப் பாட்டைகள் கூடுகின்றன.

சென்னையிலிருந்து பெங்களூர் போகும் இருப்புப் பாதையும், சித்தூரிலிருந்து காட்பாடி வழியாக விழுப்புரம் போகும் இருப்புப்பாதையும் முக்கியமானவை. காட்பாடியிலிருந்து மேற்கிலும் தெற்கிலும் போகும் இருப்புப்பாதைகள் மேட்டுப் பிரதேசத்தின் ஓரத்தில் செல்கின்றன. இவை தவிர ஜில்லாவின் வடகிழக்குக்கோடியில் அரக்கோணத்தின் வழியாகச் சித்தூர் ஜில்லாவிலிருந்து செங்கல்பட்டுக்குப் போகும் இருப்புப்பாதையும், தென்மேற்குக் கோடியில் ஜோலார்பேட்டையில் இருந்து தென்மேற்காகக் கிருஷ்ணகிரிக்குப் போகும் இருப்புப்பாதையும் இருக்கின்றன. இந்த இரண்டில் வடகிழக்கில் இருப்பது சமவெளிப் பிரதேசத்

திலும் தென்மேற்கில் இருப்பது மேட்டுப் பிரதேசத்திலும் போகின்றன.

வியாபாரம்: நம் ஜில்லாவிலிருந்து நாணயமான பட்டுச் சேலைகள், காட்டுப்பொருள்கள், பதனிட்டதோல், வேர்க்கடலை, புளி, துவரம்பருப்பு, வெல்லம் ஏற்றுமதியாகின்றன. நம் ஜில்லாவில் கிடைக்காதவையான மண்ணெண்ணெய், தீப்பெட்டி, சீமைத்துணிகள், நூல், இரும்பு, எஃகுச் சாமான்கள், பாக்கு முதலியன இறக்குமதியாகின்றன.

அப்பியாசம்: நம் ஜில்லாபடம் ஒன்று வரைந்து அதில் முக்கியமான பாட்டைகளையும் இருப்புப்பாதைகளையும் குறிக்க.

9. நம் ஜில்லாவின் சரித்திரம்

ஹிந்து ஆட்சி:

ஆதியில் நம் ஜில்லாவில் எங்கும் காடுகள் இருந்தன. அவற்றில் பூர்வ ஜனங்கள் வசித்துவந்தார்கள். அவர்கள் அநாகரிகமானவர்கள். இலைகளை உடுத்து இருந்தார்கள். கற்களால் ஆயுதங்களைச் செய்து காடுகளில் மிருகங்களை வேட்டையாடி ஜீவித்து வந்தார்கள். அவர்களின் சந்ததியார்தான் தற்காலத்தில் இருக்கும் மலையாளிகள்.

அவர்களுக்குப் பிறகு இருந்தவர்கள் குரும்பர். இவர்கள் கடற்கரையில் இருந்து வந்து நம் ஜில்லாவில் குடியேறினார்கள். இவர்கள் மூர்க்கத்தன்மை வாய்ந்தவர்கள். முதல் முதலில் தலைவன் இல்லாமலேயே எல்லாரும் சுயேச்சையாக இருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்படவே தமக்குள் வீரம், தீரம் பொருந்தியவனை அரசனாக்கிக் கொண்டு அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்

தார்கள். பிற்காலத்தில் அந்த அரசனின் சந்ததியாரே பரம்பரை அரசராயினர். அவர்கள் பலமான கோட்டைகளைக் கட்டிக்கொண்டு ஆண்டுவந்தனர். அப்படிப்பட்டவை படைவீடு, வள்ளிமலை, ஆம்பூர்பேட்டை முதலியன. அவற்றுள் எல்லாம் படைவீடு மிகவும் பெரியது. அதைச் சுற்றிப் பதினாறு மைல் விஸ்தாரமுள்ள நகரம் இருந்தது. அவை யாவும் இப்பொழுது அழிந்து காடுகளால் மூடிக் கொள்ளப்பட்டுள்ளது.

கிறிஸ்து பிறந்தபின் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குள் இவர்களுடன் புது இனத்தார் வந்து கலந்துகொண்டார்கள். அப்பொழுது இவர்கள் தம்மை பல்லவர் என்று அழைத்துக்கொண்டார்கள்.

பல்லவருடைய இராஜ்யத்தில் நம் ஜில்லாவும் அதை அடுத்துச் சுற்றுப்புறமுள்ள ஜில்லாக்களும் அடங்கி இருந்தன. அதற்கு அக்காலத்தில் தொண்டை மண்டலம் என்று பெயர்.

அவர்கள் தங்கள் நாட்டை இருபத்து நான்கு பாகங்களாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு பாகத்துக்கும் கோட்டம் என்னும் பெயரிட்டனர். ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு பலமான கோட்டை கட்டிக்கொண்டனர்.

அவ்விதம் ஏற்பட்ட கோட்டங்களில் நம் ஜில்லாவில், மணயில் கோட்டம், பல்குன்றக் கோட்டம், ஆம்பூர்கோட்டம் முதலியன அடங்கி இருந்தன. ஒவ்வொரு கோட்டத்தையும், பலநாடுகளாகப் பிரித்து இருந்தார்கள். அவற்றிற்குக் காரைநாடு, அம்மூர்நாடு என அந்தந்த நாட்டிலிருந்த முக்கிய ஊரின் பெயர் இட்டார்கள்.

பல்லவ அரசர்களில் முக்கியமானவர் மஹேந்திர வர்மனும் அவர் குமாரர் நரசிம்மவர்மனும். அவர்கள் அங்

கங்கே பல கோயில்களைக் கட்டினர்கள். கற்பாறைகளைக் குடைந்தும் குகைக் கோயில்களை உண்டாக்கினர்கள். அவ்விதம் செய்த கோயில் ஒன்று மஹேந்திரவாடியில் உள்ளது. அங்கு ஒரு பெரிய ஏரியும் கட்டப்பட்டது. அவற்றை எல்லாம் மஹேந்திரவர்மன் உண்டாக்கினர்.

ஒன்பதாவது நூற்றுண்டில் சோழர் பல்லவர்களை ஜெயித்து அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் நம் ஜில்லாவுக்குத் தெற்கில் தஞ்சாவூரில் ஆண்டு வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் பராந்தகர்.

அக்காலத்தில் நம் ஜில்லாவில் வடபாகத்தில் பாணர் என்னும் வம்சத்தார் ஆண்டுவந்தனர். அதற்கு வடுகுவலி நாடு என்று பெயர். அதற்குத் தலைநகர் திருவலம். பராந்தகசோழர் அவர்களையும் ஒடுககித் திருவலத்தைத் தம் தலைநகர்களில் ஒன்ருகக் கொண்டார்.

அவருக்குப் பிறகு அவர் குமாரர் ராஜாதித்தன் அரசரானர். அவரை நமக்கு மேற்கில் ஆண்ட ராஷ்டிரகூட அரசன் ஒருவன் தக்கோலத்தில் போரில் வென்று கொன்ருன். அதனல் நம் ஜில்லா ராஷ்டிரகூடருடைய ராஜ்யத்தில் சேர்ந்தது. ஆயினும் இரண்டாவது ஆதித்தன் என்னும் சோழ அரசர் சில வருஷங்கள் கழித்துத் தொண்டை மண்டலத்தை மறுபடியும் ஜெயித்துக்கொண்டார். நாளாவட்டத்தில் தெற்கில் பாண்டியர் சோழர்களைத் தோற்கடித்ததால் சோழர்களின் ஆட்சி நம் ஜில்லாவில் முற்றுப் பெற்றது.

அப்பொழுது மைசூர் நாட்டிலுள்ள துவார சமுத்திரம் என்ற இடத்தைத் தலைநகராகக்கொண்டு பெல்லால வம்சத்தினர் ஆண்டுவந்தனர். அவர்கள் நம் ஜில்லாவைத் தம் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டார்கள்.

மஹமதியர் ஆட்சி

சுமார் அறுநூறு வருஷங்களுக்குமுன் தக்காணத்தில் பீஜபூர், கோலகொண்டா என்னும் இடங்களில் மஹமதியர் ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தென் இந்தியாவின்மேல் படை எடுத்துவர ஆரம்பித்தார்கள். அதைத் தடுக்கத் துங்கபத்திரை நதிக்கரையில் ஹிந்து அரசர்கள் விஜயநகர ராஜ்பத்தை ஸ்தாபித்தார்கள். அது தென் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. அதனால் நம் ஜில்லாவும் அதில் அடங்கி இருந்தது. விஜயநகர அரசர்கள் அங்கங்கே கோட்டைகளைக் கட்டி அங்குத் தம் பிரதிநிதிகளை வைத்து ஆண்டுவந்தனர்.

விஜயநகர அரசர்களில் முக்கியமானவர் கிருஷ்ண தேவராயர். அவர் திருவண்ணாமலையிலுள்ள கோவிலின் ஆயிரக்கால் மண்டபம், இரண்டு திருக்குளங்கள், பதினொரு நிலைக்கோபுரம், தேர், மாடவீதி முதலியவற்றை ஏற்படுத்தினார். பதினொரு நிலைக்கோபுரம் இவர் காலத்தில் முடியவில்லை. ஆகையால் அது சேவப்ப நாயக்கரால் முடிக்கப்பட்டது. அவர் விஜயநகர ராஜாக்களின்பிரதிநிதி. தஞ்சாவூரை தலைநகராகக்கொண்டு நம் ஜில்லாவையும் ஆண்டுவந்தார்.

பிற்காலத்தில் தக்காண மஹமதியர் விஜயநகர ராஜ்யத்தை ஜெயித்துக்கொண்டனர். அவர்களிடமிருந்து சிற்சில பகுதிகளை மஹாராஷ்டிரர் ஜெயித்து ஆண்டுவந்தனர்; தக்காண மஹமதியரை டெல்லியில் ஆண்ட ஔரங்கசீப் என்னும் மஹமதிய அரசர் ஜெயித்தார். அதனால் நம் ஜில்லாவின் பெரும்பாகம் டில்லி ராஜ்யத்தைச் சேர்ந்தது.

டில்லிச் சக்கரவர்த்தியின் பிரதிநிதி ஒருவர் ஹைதராபாத்தில் சுயேச்சையாக ஆளத்தொடங்கினார். அவரின்கீழ் அன்வாருதீன் என்னும் நவாபு நம் பிரதேசத்தை ஆண்டுவந்தார். ஆர்க்காடு அவருக்குத் தலைநகரமாக இருந்தது.

அவருடைய தங்கையின் குமாரன் சந்தாசாயபு என்பவர் பட்டத்துக்குப் போட்டிபோட ஆரம்பித்தார். அதனுல் இருவருக்கும் சண்டைகள் நடந்துவந்தன. ஆம்பூரில் நடந்த சண்டையில் அன்வாருதீன் கொலையுண்டார்.

ஆங்கில ஆட்சி:

அச்சமயத்தில் இங்லீஷ்காரர் சென்னையில் வியாபாரம் செய்து வந்தார்கள். புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர் வியாபாரம் செய்து வந்தார்கள். இருவருக்கும் வியாபாரப் போட்டி அதிகமாக இருந்தது. அதனுல் இருவரும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் தாங்கள் மேல் ஓங்க இதுதான் சமயம் என்று நினைத்தார்கள். ஆங்கிலேயர் அன்வாருதீன் குமாரர் மஹமது அலியுடன் கூடிக்கொண்டார்கள். பிரெஞ்சுக்காரர் சந்தாசாயபுவுடன் கூடிக்கொண்டார்கள். இங்கிலீஷ்காரர் க்ளைவ் என்பவரை நவாபின் தலைநகரான ஆர்க்காட்டுக்கு அனுப்பினுர்கள். க்ளைவ் ஆர்க்காட்டைப் பிடித்துக்கொண்டார். அதன் பிறகும் பல சண்டைகள் நடந்தன.

அச்சமயங்களில் அவர்கள் ஊர்களைக் கொள்ளை அடிப்பார்கள். அதனுல் ஜனங்கள் பயந்துகொண்டு, தங்கள் விலை உயர்ந்த நகை முதலியவற்றைப் புதைத்துப் பத்திரப்படுத்திவிட்டுப் பெரிய ஊர்களைவிட்டுச் சிறிய ஊர்களில் போய், மறைந்துகொண்டு இருப்பார்கள். எப்பொழுதும் ஜனங்களின் மனதில் திகில் இருந்துகொண்டே இருக்கும். வியாபாரிகள் தங்கள் பொருள்களை எடுத்துக்கொண்டு போய்க்கொண்டு இருந்தால், போர்ச் சேவகர் வழிமடக்கிக் கொள்ளை அடிப்பார்கள். தங்கள் உணவுக்காக ஊர்களில் இருக்கும் பசுக்களையும் மாடுகளையும் எல்லாம் கொன்று விடுவார்கள். இதனுல் உழவரும் வாணியரும் மிக்க கஷ்டப்

பட்டார்கள். இவர்கள் கொள்ளை அடிக்கும் ப்ரதேசத்தில் பல மைல்கள் வட்டத்தில் ஓர் ஆள்கூட கண்ணுக்குத் தென் படவே மாட்டானும். இவற்றை எல்லாம் அக்காலத்தில் ப்ரெஞ்சுக்காரரிடம் உத்தியோகஸ்தராய் இருந்த ஆனந்த ரங்கப் பிள்ளை என்னும் கனவான் எழுதி வைத்தார்.

கடைசியில் சண்டாசாயபு கொலையுண்டார். மஹம்மது அலி நவாபு ஆனர். அந்த நவாபுக்குப் பின் ஆண்டவரை இங்கிலீஷ்காரர்,'எங்களுடைய சேனை ஒன்றை உனக்கு உதவி யாக வைத்துக்கொள். அதற்காக நிரம்பப் பணம் பிரதி வருஷமும் கொடு' என்ருர்கள். அந்தத் தொந்தரவைப் பொறுக்கமுடியாமல் அவர் தம் இராஜ்யத்தையே இங்கி லீஷ்காரருக்கு ஒப்புவித்துவிட்டார். அவர்கள் அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவரலானுர்கள். அப்பொழுது நம் ஜில்லாவும் இங்கிலீஷ்காரருக்குச் சேர்ந்துவிட்டது. அதுமுதல் இங்கிலீஷ்காரர் நம்மை ஆண்டு வருகிருர்கள்.

10. நூதன பரீட்சைக் கேள்விகள்

1. அடியில் கண்டவை நம் ஜில்லாவுக்கு எந்த எல்லைப் புறத்தில் இருக்கின்றன ?

(1) மைசூர் ______ (2) செங்கல்பட்டு ______

2. அடியில்கண்ட ஊர்களில் செய்யாற்றின் கரையில் இருப் பவை எவை ? பாலாற்றின் கரையில் இருப்பவை எவை ?

(1) ஆர்க்காடு (3) கலசபாக்கம் (5) வாணியம்பாடி
(2) திருவத்திபுரம் (4) ஆம்பூர் (6) போளூர்

3. கீழ்க்கண்டவை எந்த பூகோளச் சொற்களுக்கு உதாரணங்களாகும் ?

(1) கர்னுடிகர் (2) பொன்னி (3) ஜவ்வாது

4. கோடிட்ட இடங்களில் ஏற்ற மொழிகளை அமைக்க :

(1) செய்யாற்றில் ——— என்னும் இடத்தில் அணைகட்டியிருக்கிறார்கள்.

(2) ——— யில் பாரி கம்பெனியாரின் தொழிற்சாலை இருக்கிறது.

(3) ——— ல் இருந்து வாரை, மூங்கில் முதலியவை ஏற்றுமதியாகின்றன.

(4) ——— யில் பெங்களூர் — சென்னை ரயில் பாதையும் திருவண்ணுமலை—சித்தூர் ரயில் பாதையும் சந்திக்கின்றன.

(5) ——— ஏரி நம் ஜில்லாவிலுள்ள எல்லா ஏரிகளிலும் பெரியது.

5. சென்னையிலிருந்து பெங்களூர் போகும் பாதையின் ஓரத்திலுள்ள ஊர்களின் பெயர்களுடன் வேறு சில கீழே கொடுக்கப்பட் டுள்ளன. சம்பந்த மற்ற ஊர்களின் பெயர்களை அடித்துவிடுக.

(1) காவேரிப்பாக்கம் (4) ஆர்க்காடு (7) வந்தவாசி
(2) வாலாஜா (5) வேலூர் (8) திருப்பத்தூர்
(3) போளூர் (6) ஆம்பூர்

6. கீழ்க்கண்டவை எந்தப் பிரதேசத்தில் இருக்கின்றன ?

(1) கௌண்டின்யநதி (3) சேத்துப்பட்டு
(2) ஆலங்காயம் (4) பனப்பாக்கம்

7. பொருள்களும் அவை உற்பத்தியாகும் இடங்களும் மாற்றித் தரப்பட்டுள்ளன. சரியாக எழுதுக.

(1) ஜாடிகள் ——— தண்டராம்பட்டு.
(2) சீனிப்பழம் ——— வந்தவாசி.
(3) திராட்சைப்பழம் ——— இராணிப்பேட்டை.
(4) மிளகாய் ——— திருப்பத்தூர்.
(5) கோரைப்பாய் ——— ஆம்பூர்.

8. கீழ்க்கண்டவை சரியா தவறு என்று கூறுக:

(1) பாலாற்றுப் பிரதேசத்தில் வெற்றிலை பயிராகிறது.
(2) ஆம்பூரில் இருப்புப்பாதைகள் சந்திக்கின்றன.
(3) களம்பூர் ஏரி நம் ஜில்லாவிலுள்ள பெரிய ஏரிகளில் இரண்டாவதாகும்.
(4) பாலாறு நம் ஜில்லாவின் தென்பாகத்தில் பாய்கிறது.
(5) நம் ஜில்லாவில் மேட்டுப் பிரதேசம் மேற்குப் பாகத்தில் இருக்கிறது.

9. அடியில் கண்டவை தனித்தனி இரண்டு கூறுக:—

(1) பெரிய மாட்டுச் சந்தைகள் கூடும் இடங்கள்.
(2) கம்பளி நெய்யும் இடங்கள்.
(3) தோல் பதனிடும் இடங்கள்.
(4) காலேஜுகள் இருக்கும் இடங்கள்.
(5) பெரிய கோயில்கள் உள்ள இடங்கள்.

Printed at the 'Caxton Press,' Madras — 1940.

Caxton
Press,
Madras